பக்கங்கள்: 14

**இனி இது ரகசியம் அல்ல!**

ஜனாதிபதி தேர்தலில் தமக்குக் கிடைத்த பெரு வெற்றியை அடுத்து சுமார் இரண்டரை மாதங்கள் சத்தம் சந்தடியின்றி அமெரிக்கா சென்று அஞ்ஞாதவாசம் இருந்த பஸில் ராஜபக்ஷ நாடு திரும்பியதும் தமது அரசியல் சாணக்கிய வேலையைக் காட்டத் தொடங்கி பக்கம் 02

காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 தை 23 வெள்ளிக்கிழமை 07.02.2020 கதிர் 93

# வெட்கம்! வெட்கம்!!

# யாழ் சமூகத்துக்கே பேரவமானம் பல்கலை மாணவ சமூகத்தினால்

## மிகக் கேவலமான மட்டத்தில் பகிடிவதை பாலியல் வக்கிரமாக அரங்கேறுகின்றது!

யாழ்ப்பாணம்,பெப்ரவரி 07

உலகத்தையே வியக்க வைக்கும் வீர தீர ஈகப் போராட்டத்தை முன்னெடுத்த ஈழத்தமிழர் சமூகம், அந்த வியத்தகு போராட்டத்துக்குக் களம் அமைத்து வித்திட்ட யாழ் பல்கலைக்கழக மாணவ சமுதாயத்தின் இன்றைய தறிகெட்ட – பாலியல் வக்கிரம் நிறைந்த – பகிடிவதைக் கொடூரத்தால் வெட்கித் தலைகுனிந்து நிற்கிறது.

பக்கம் 03

## விசாரணை நடத்துகின்றார் ஆளுநர் உயர் கல்வி அமைச்சரும் வருகிறார்!

யாழ். பல்கலை மாணவரின் சீத்துவத்தை அறிய

யாழ்ப்பாணம்,பெப்.07

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் இடம்பெறுவதாகக் கூறப்படும் பகிடிவதை குறித்து வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தனிப்பட்ட முறையில் விசாரணைகளை முன்னெடுத்திருக்கிறார். பக்கம் 03

## கடும் நடவடிக்கை எடுக்குமாறு யாழ். பல்கலைக்கு பேரழுத்தம்

யாழ்ப்பாணம்,பெப்.07

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அளவுக்கதிகமாகப் பகிடிவதை இடம்பெறுகின்றமை மற்றும் தொலைபேசி மூலமான பாலியல் துன்புறுத்தல்கள் குறித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கும், உயர் கல்வி அமைச்சுக்கும் கிடைத்த பக்கம் 02

## பிரதமர் மஹிந்த இன்று இந்தியாவுக்கு பயணம்

கொழும்பு, பெப். 07

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இன்று இந்தியா செல்கிறார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பின் பேரில் பிரதமர் இந்த விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார் எனப் பிரதமர் ஊடகப்பிரிவு செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த விஜயத்தின் போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இந்திய ஜனாதிபதி மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் உள்ளிட்ட இந்தியாவின் உயர் அதிகாரிகளுடன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளார். பக்கம் 03

## பாக்.விமானப் படைத் தளபதி புதனன்று இலங்கை வருகை



கொழும்பு,பெப்.07

பாகிஸ்தான் விமானப்படை தளபதி எயார் சீவ் மார்ஷல் முஜாஹிட் அன்வர் கான் நேற்று முன்தினமிரவு இலங்கைக்கு வருகை தந்துள்ளார். பாகிஸ்தானின் விமானப்படை தளபதியுடன் மேலும் இரண்டு அதி பக்கம் 03

## விசர் நாய்க்கடிக்கு இலக்கானவர் சாவு!

முல்லைத்தீவு, பெப். 07

விசர் நாய்க் கடிக்கு இலக்கான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில், சிகிச்சைபெற்று வந்த குடும்பஸ்தர் ஒருவர், நேற்று முன் தினம் இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு–உடையார் கட்டுப் பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தை பக்கம் 03

## கொரோனா வைரஸ் சந்தேகம்; பெண்ணுக்குத் தொடர் சிகிச்சை

யாழ்ப்பாணம், பெப். 07

கொரோனா வைரஸ் தாக்கத்துக்கு உள்ளாகி இருக்கலாம் என்ற சந்தேகத்தில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பெண்ணுக்குத் தொடர்ந்து சிகிச்சை வழங்கப்பட்டு வருவதாக யாழ்.போதனா வைத்திய சாலையின் பணிப்பாளர் மருத்துவர் பக்கம் 03

## திருகோணமலை அரச அதிபராக ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி!




கொழும்பு,பெப்.07

திருகோணமலை மாவட்ட அரச அதிபராக ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் ருவான் குலதுங்கவை நியமிக்க அரசாங்கம் பக்கம் 03

## தமிழ்ப் பொலிஸ் உத்தியோகத்தர் மட்டக்களப்பில் அடித்துக் கொலை





மட்டக்களப்பு,பெப்.07

மட்டக்களப்பு – ஆயித்தியமலை மூன்றாம் கட்டை பிரதேசத்தில் தமிழ்ப் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர், பக்கம் 03

## பொதுத் தேர்தலில் மொட்டு தனித்துக் களமிறங்க வியூகம்

கொழும்பு, பெப். 07

எதிர்வரும் நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தனித்துப் போட்டியிடுவது குறித்து தீவிரமாக ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இப்படி போட்டியிடுவதால் பக்கம் 03

## பேராசிரியர் கந்தசாமிக்கு 4 ஆம் முறை பதவி நீடிப்பு

யாழ்ப்பாணம், பெப். 07

வாழ்நாள் பேராசிரியர் கந்தசாமிக்கு யாழ். பல்கலைக்கழகத்தின் தகுதி வாய்ந்த அதிகாரியாக எதிர்வரும் மே 7ஆம் திகதி வரை நான்காவது முறையாகப் பதவி நீடிப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவரால் இந்தப் பதவி நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் பிரிவு 20, உப பிரிவு 4 (பி) க்கு அமைவாக நகர திட்டமிடல், நீர் வழங்கல் பக்கம் 02

## தொண்டமனாறு சிறுவர் பூங்காவுக்குள் 100 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைது!

அதிகாலையில் மதுவரி அதிகாரிகள் அதிரடி



யாழ்ப்பாணம்,பெப்.07

தொண்டமனாறு சிறுவர் பூங்காவில் கடத்துவதற்கு தயாரான நிலையிலிருந்த 100 கிலோ கிராம் கேரளக் கஞ்சா கைப் பக்கம் 03

## கல்முனை உப பிரதேச செயலகத்தை தரமுயர்த்தப் பிரதமர் மஹிந்த உறுதி

முஸ்லிம் பிரதிநிதிகளின் எதிர்ப்பை நிராகரித்தார்

கொழும்பு, பெப். 07

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவதற்கு முஸ்லிம் பிரதிநிதிகளின் கடும் எதிர்ப்பை நிராகரித்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அதன் முதல் பணியாக எல்லை நிர்ணயக் குழுவை நியமித்து விரைவாக அறிக்கை தருமாறு பொது பக்கம் 03

# புரிந்துணர்வு உடன்படிக்கையில் விக்கி அணியினர் ஞாயிறு ஒப்பம்

கொழும்பு,பெப்ரவரி.07

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் கூட்டணி அமைத்து போட்டியிடுவது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சி.வீ.விக்னேஸ்வரன் தலைமையிலான அணியினர் கைச்சாத்திடவுள்ளனர்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளது.

தமிழ் மக்கள் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எவ், சிறிகாந்தா – சிவாஜி தரப்பின் தமிழ்த் தேசியக்கட்சி, அனந்தியின் ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகம் ஆகியன முதலில் கூட்டமைப்பாக புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவது என்றும் பின்னர் பொதுஅமைப்புகளை இணைத்துக் கொள்ளலாம் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கூட்டணி தொடர்பான புதிய யாப்பு தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தக் கூட்டணியை பதிவு செய்வது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதேவேளை, ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பு, விக்னேஸ்வரன் அணியை உள்ளடக்குவதற்காக தனது கட்சிக்கு 'தமிழர்ஐக்கிய முன்னணி'யென்றபெயரை பரிந்துரைந்துள்ளபோதும், அதைத் தேர்தல்கள் திணைக்களம் நிராகரித்திருந்தது. இந்த நிலையில், புதிய பெயரை பரிந்துரைக்கும்படி தேர்தல்கள் திணைக்களம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, 'தமிழ் மக்கள் தேசிய கூட்டணி' என்ற பெயரை அக்கட்சி பரிந்துரைத்துள்ளது. அதை ஏற்பதற்குக் கொள்கையளவில் தேர்தல்கள் ஆணைக்குழு இணக்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தனது சுயகட்சியான 'தமிழ் மக்கள் கூட்டணி'யைப் பதிவு செய்யும் நடவடிக்கையில் விக்னேஸ்வரன் தரப்பு ஈடுபட்டுள்ளது. இதற்காகத் தேர்தல்கள் ஆணைக்குழுவைச் சந்தித்துப் பல ஆவணங்களைச் சமர்ப்பித்துள்ளது.

# ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்துக்குள்ளும் ஜனாதிபதி அதிரடி 'விசிட்' செய்ய வேண்டும்

## கோருகின்றார் அர்ஜுன ரணதுங்க

கொழும்பு,பெப்.07

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்துக்கும் திடீர் விஜயம் மேற்கொண்டு நிலைமைகளை ஆராய வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினரும் உலகக் கிண்ணத்தை வென்ற இலங்கை அணியின் தலைவருமான அர்ஜுன ரணதுங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

நுகேகொடையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் பேசிய அவர் –

ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தில் மோசடிக்காரர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவ்வாறனவர்களே இதனை நிர்வகித்து வருகின்றமையால், கிரிக்கெட் சபைக்கு கிடைக்கும் நிதியை அவர்கள் சூறையாடுகின்றனர்.

ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் நிர்வாகத்திறனிலுள்ள குறைபாட்டினால், நிதிமோசடி, ஊழல்போன்றவை இடம்பெற்று வருகிறன. இவ்வாறனவர்களிடமிருந்து ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தையும், இலங்கைக் கிரிக்கெட்டையும் பாதுகாக்க வேண்டும்.

நிர்வாகத்தில் உள்ளவர்கள் தத்தமது கழகங்களில் விளையாடும் வீரர்களை அணிக்குள் கொண்டுவருகின்றமையால், திறமையான வீரர்களுக்கு அங்கீகாரம் கிடைப்பதில்லை. இதனால், இலங்கை கிரிக்கெட் அணியும் அதளபாதாளத்துக்குள் வீழ்ந்துள்ளது.

எதிர்வரும் உலக இருபதுக்கு இருபது கிரிக்கெட் போட்டிக்கு நாம் தகுதிச் சுற்றில் விளையாடியே பிரதான சுற்றுக்குள் நுழையவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

மேலும், இலங்கை பாடசாலை கிரிக்கெட் அமைப்பிலும் பாரிய தவறு நிலவுகிறது. அதனையும் சரிசெய்ய வேண்டும். உதாரணத்துக்கு 19 வயதுக்குட்பட்ட உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இலங்கை 10ஆவது நிலையை அடைந்தது.

எம்மைக்காட்டிலும், ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய அணிகள் சிறப்பாக விளையாடி வருகின்றன. ஆகவே, எமது எதிர்கால கிரிக்கெட்டின் நிலை எவ்வாறு இருக்கப்போகின்றது? 19 வயதுக்குட்பட்ட அணித் தெரிவிலும் நிர்வாகிகள், அதிகாரிகள் ஆகியோருக்குத் தேவையான வீரர்களையே உள்ளடக்கியுள்ளனர் என ஊடகங்கள்வாயிலாக அறிந்துகொண்டேன்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் பல நல்ல திட்டங்கள் உள்ளன. அவர் வித்தியாசமான கோணத்தில் செயற்பட்டு வருகிறார். அண்மைய காலங்களில் அரச நிறுவனங்கள், வைத்தியசாலைகள் போன்றவற்றில் திடீர் விஜயங்களை மேற்கொண்டு பரிசோதனை நடத்தியமையுடன், பொது மக்களுடனும் உரையாடியிருந்தார். இவை வரவேற்றகத்தக்க விடயங்களாகும்.

அதுபோலவே, ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவத்துக்கும் சென்று நிலைமைகளை ஆராயுமாறு வேண்டுகோள் விடுக்கிறேன்.

– என்றார்.

## கடும் நடவடிக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறைப்பாடுகளையடுத்து, பகிடிவதைக்கெதிராக கடும் நடவடிக்கைகளை எடுக்குமாறு அமைச்சு மட்டத்திலும், வடக்கு மாகாண ஆளுநர் மட்டத்திலும் இருந்து பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு கடுமையான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றன என அறியவருகிறது.

அண்மையில், கிளிநொச்சியில் பகிடிவதை காரணமாக பல்கலைக் கழக மாணவி ஒருவர் தற்கொலைக்கு முயன்ற சம்பவம் தொடர்பில் பல்கலைக்கழக பதிவாளரிடம் கேட்ட போதே இந்த விடயம் அறியக் கிடைத்தது.

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் அளவுக்கதிகமாக பகிடிவதை இடம்பெறுகின்றமை குறித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கும், உயர் கல்வி அமைச்சுக்கும் பாதிக்கப்பட்ட மாணவர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர் பலர் முறைப்பாடுகளைச் செய்துள்ளனர்.

இதையடுத்து, இது குறித்து மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும், பல்கலைக் கழக நிர்வாகம் பகிடிவதைக்கு எதிராகக் கடும் நிலைப்பாட்டில் இருக்கின்றது என்ற நம்பிக்கையைப் பெற்றோர் மத்தியில் ஊட்டும் வகையிலும் யாழ். பல்கலைக் கழகத் தகுதிவாய்ந்த அதிகாரி பேராசிரியர் கந்தசாமியின் அறிவுறுத்தல்களுக்கமைய விசேட செயற்றிட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்தத் திட்டம் பற்றி பல்கலைக்கழக ஒழுக்காற்று உத்தியோகத்தர்கள், முறைப்பாட்டு அதிகாரி, பிரதி முறைப்பாட்டு அதிகாரிகள், மாணவ ஆலோசகர்கள், சிரேஷ்ட மாணவ ஆலோசகர்கள், நலச் சேவைகள் உதவிப் பதிவாளர் உட்பட மாணவர் ஒழுக்கத்துடன் தொடர்புபட்ட அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கி இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள பிரதான வளாகத்தில் கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் பதிவாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பேராசிரியர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் உயர்கல்வி அமைச்சரினால் கடந்த மே மாதம் 7ஆம் திகதி வெளியிடப்பட்ட 2148/35 ஆம் இலக்க அதி சிறப்பு வர்த்தமானிக் கட்டளைக்கு அமைவாக இன்று தொடக்கம் மூன்று மாத காலத்துக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நியமனத்தின் பிரகாரம் யாழ். பல்கலைக்கழக தகுதி வாய்ந்த அதிகாரி பதவிக்காக வாழ்நாள் பேராசிரியர் க. கந்தசாமிக்கு வழங்கப்படும் மாதாந்தப்படி, அலுவலகம், மற்றும் ஆளணி, குறித்தொதுக்கப்பட்ட வாகனம், சாரதி, எரிபொருள் உட்பட சகல வசதிகளும் யாழ்.பல்கலைக் கழகத்தினால் வழங்கப்படும் என்று கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

2019 ஏப்ரல் 30 ஆம் திகதி முதல் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவினால் திடீரென பதவி நீக்கப்பட்டதன் பின்னர் மே மாதம் முதல் வாழ்நாள் பேராசிரியர் க. கந்தசாமி உயர்கல்வி அமைச்சரினால் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தரின் கடமைகளையாற்றும் வகையில் தகுதி வாய்ந்த அதிகாரியாக மூன்று மாதங்களுக்கு நியமிக்கப்பட்டு, கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் அடுத்த மூன்று மாதங்களுக்கும் நவம்பர் மாதம் தொடக்கம் நேற்று பெப்ரவரி 6ஆம் திகதிவரை மூன்றாவது தடவை மேலும் 3 மாதம் பதவி நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் இன்று முதல் எதிர்வரும் 2020ஆம் ஆண்டு மே மாதம் 07 ஆம் திகதி வரை மீள் பதவி நீடிப்பு வழங்கப்பட்டிருக்கிறது. (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விட்டார் என்று தகவல்.

முதல் வேலையாக மற்றைய தரப்புகளில் இருந்து ஆள்களை இழுத்துப் பிடுங்கித் தமது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பக்கம் சேர்த்துத் தமது அணியை பலப்படுத்தும் வேலையை அவர் முன்னெடுத்திருக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

அந்த வகையில் அவர் கொழும்பில் மீளக் கால் பதித்த அடுத்த நாளே முக்கியஸ்தர் ஒருவர் அவர் வலையில் வீழ்ந்திருக்கின்றார். அவர் மத்திய மாகாணத்தின் கடைசி முதலமைச்சரான பேசல ஜயரட்ண.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சொந்த மாவட்டமான பொலன்னறுவையைச் சேர்ந்தவர். மைத்திரியின் தயவில் அரசியலில் வளர்ந்தவர். சொந்த மாவட்டத்தில் மைத்திரியின் வலது கை என்று கூறத்தக்கவர்.

மைத்திரியின் உதவியால் வட மத்திய மாகாண சபையின் உறுப்பினராகவும் மாகாண அமைச்சருமானவர். 2015 ஜனவரி ஜனாதிபதித் தேர்தலின் போது, சு.கவை விட்டு மைத்திரிபால சிறிசேன வெளியேறி, எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராகக் களமிறங்கிய போது பொலன்னறுவையில் பகிரங்கமாக மைத்திரியை ஆதரித்து நின்றவர்.

அதனால் மைத்திரிபால சிறிசேன புதிய ஜனாதிபதியானதும் பேசல ஜயரட்ணவை அடுத்த மூன்று வாரங்களுக்குள் வட மத்திய மாகாணத்தின் முதலமைச்சராக்கி அழகுபார்த்தார் மைத்திரி.

2017 இல் வட மத்திய மாகாண சபையின் பதவிக் காலம் முடிவடையும் வரை அதன் முதல்வராக இருந்தார். மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக விளங்கிய காலம் முழுவதும் அவருக்கு வலது கரமாக நின்று பிடித்தார்.

இப்போது மைத்திரிபால காற்றுப் போன பலூன். இனி அவருடன் இருந்து என்ன பலன்? என்ன பயன்?

அதனால், ஜெயரட்ணவை தங்கள் தரப்புக்கு இழுத்து விட்டார் பஸில். ஆக, மைத்திரிக்குச் சொந்த மாவட்டத்திலேயே சூனியம் வைத்தாகிவிட்டது. வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மைத்திரி பொலன்னறுவை மாவட்டத்தில் இறங்கினால் அவருக்குப் போட்டியாகக் களத்தில் இறங்க அவரது முதலமைச்சரையே தயார் செய்து விட்டது பஸிலின் சாணக்கியம்.

அது மாத்திரம் அல்ல, பஸில் இப்போது பிரேரித்திருக்கும் ஓர் அரசியல் திட்டம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அணியில் இருக்கும் கூட்டுக் கட்சிகளுக்கே வயிற்றில் புளியைக் கரைத்து விட்டிருப்பதாகத் தகவல்.

கூட்டில் இருக்கும் ஒவ்வொரு கட்சியும் ஏதோ தங்களின் பலத்தில்தான் பொதுஜன பெரமுன எழுந்து நிற்பது போல பந்தாக் கதை பேசுவது பஸிலுக்குப் பிடிக்கவில்லையாம்.

கூட்டுக் கட்சிகளை எல்லாம், வரும் பொதுத் தேர்தலில் தனித்தனியே போட்டியிட்டுத் திரட்டக் கூடிய எம்.பிக்களை எல்லாம் திரட்டிக் கொண்டு வாருங்கள், தேர்தலுக்குப் பின்னர் கூட்டுச்சேர்ந்து அரசை அமைப்போம், அப்போது மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெறலாம் என்று கதை அவிழ்ந்து விட்டிருக்கின்றாராம் பஸில்.

அப்படி அவர் கதை அவிழ்த்து விட்டமைக்கு இரண்டு காரணங்கள்.

ஒன்று – தமது கூட்டில் இருந்துகொண்டு அதிகம் ஆரவாரம் பண்ணும் தோழமைக் கட்சிகளுக்கு – சு.க உட்பட அனைத்துக் கட்சிகளுக்கும் – அவர்களின் ஆதரவு மட்டம் என்னவென்பதை அடித்து உணர்த்துவது ஒரு நோக்கம். இப்படித் தேர்தலில் நின்றால் பொதுஜன பெரமுன தனித்துத் தனது பலத்தை நிரூபித்துக் காட்ட முடியும் என்று பஸில் நம்புகின்றார்.

அடுத்தது – தேர்தலின் பின்னர்தான் அரசமைக்கும் கூட்டுப் பற்றிப் பேசலாம் என்றால், இப்போது ஐ.தே.க பக்கம் நிற்கும் முஸ்லிம்களினதும், மலையகத் தமிழர்களினதும் கட்சிகளை அதேபோன்று ஐ.தே.க. கூட்டில் இல்லாமல் தனிய நிற்க வைத்து (அதே திட்டத்தை ஐ.தே.க. தலைவர் ரணிலும் ஏற்கனவே பிரேரித்துள்ளார்.) தேர்தல் முடிந்த பின்னர் அவற்றுடன் பேரம் பேசலாம், அதன் மூலம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு எம்.பிக்களின் ஆதரவையும் பெற முடியும் என பஸில் நம்புகின்றார்.

ஒரு புறம் பிற கட்சிகளில் இருப்போரை வரிசையாக இலக்கு வைத்து பொதுஜன பெரமுன பக்கம் இழுத்துப் போடும் அதிரடி நடவடிக்கை, மறுபுறம் கூட்டுக் கட்சிகளைத் தனித்துப் பொதுத் தேர்தலில் நிற்க வைத்து அவற்றின் பலம், பலவீனங்களை அவற்றுக்கே உணர வைக்கும் அதிரடித் திட்டம் – என்று பஸிலின் வருகையோடு கட்டவிழும் அரசியல் தந்திரோபாயங்கள் அரசுக் கட்சிக்குள்ளேயே வயிற்றைக் கலக்க வைத்திருக்கின்றன என்பது உண்மை.

★ ★ ★

ஐ.தே.கட்சிக்குள் ரணிலுக்கு ஏற் பட்டுள்ள செல்வாக்குச் சரிவை அடுத்து, அரசியலிலிருந்து அவரை கௌரவமாக ஒதுங்க வைக்கும் பல்வேறு திட்டங்கள் குறித்து பல மட்டங்களில் ஆராயப்படுவதாக ஒரு தகவல் கொழும்பில் உயர் வட்டாரங்களில் இருந்து கசிந்தது.

சர்வதேசக் கட்டமைப்பு ஒன்றின் உயர் பதவிக்குச் செல்வதற்காகக் கட்சித் தலைமையிலிருந்தும் உள்ளூர் அரசியலிலிருந்தும் அவர் விடைபெறுகின்றார் என்று காட்டுவதன் மூலம், நிலைமையைச் சமாளிப்பதற்குச் சில தரப்புகள் முயல்வதாகத் தெரிகின்றது. அந்த முயற்சிக்கு அரசுத் தலைமையின் ஆசீர்வாதமும் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

அமெரிக்கா உட்பட்ட மேற்குலக நாடுகள் மட்டத்திலும், இராஜதந்திரிகள் தரத்திலும் ரணிலுக்கு நல்ல பெயர் உண்டு. அதனை ரணிலுக்கு மாத்திரமல்லாமல் நாட்டுக்கும் நற்பெயர் தரக்கூடியதாக மாற்றுவதில் தலைமைக்கு ஆட்சேபனை இல்லை என்றே கூறப்படுகின்றது.

இன்னும், விளக்கமாகக் சொல்வதானால் சந்திரிகா, மஹிந்த, மைத்திரி, கோட்டா போன்று ஜனாதிபதி பதவியை எட்டாமலேயே அரசியலை விட்டு விலக வேண்டிய அவலம் – நிர்ப்பந்தம் – ரணிலுக்கு வந்திருப்பதால் ஒரு சர்வதேச ரீதியான உயர் பதவி என்ற பெருமையுடன் உள்நாட்டு அரசியலுக்கு அவர் முழுக்குப் போடுவது அவருக்கும் நல்லது. நாட்டின் அரசியலுக்கும் நல்லது என்று சுட்டப்படுகின்றது.

ஐ.நா., கொமன்வெல்த் அமைப்பு, ஐ.நாவின் உப அமைப்புகள், உலக வங்கி போன்ற ஒன்றில் பொறுப்பு வாய்ந்த – பொருத்தமான – பதவி ஒன்றை ரணிலுக்குத் தேடித் கொடுப்பதற்கு சார்பாக முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிகின்றது.

தமிழருக்கு எதிராக வெளிப்படையாகப் பேரினவாதம் பேசத் தயங்கிய ஒரு தலைவன் ரணில். எங்கிருந்தாலும் வாழ்க.

–மின்னல்–

## தெண்டமனாறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பற்றப்பட்டதுடன், அதனை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று மதுவரித் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

இந்த கஞ்சா கடத்தல் முறியடிப்பு நேற்று அதிகாலை 4.30 மணிக்கு முன்னெடுக்கப்பட்டதாக அதிகாரிகள் கூறினர்.

சங்கானை மதுவரி அத்தியட்சகர் சஞ்ஜய் சிறீமன்ன தலைமையிலான பிரிவினரே இந்த நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

தொண்டமனாறு சிறுவர் பூங்காவுக்குள் கஞ்சா பார்சல்களை கடத்துவதற்குத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்தபோது மதுவரித் திணைக்களத்துக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

பலாலியைச் சேர்ந்த 34 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டார். சந்தேக நபரை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட கஞ்சா போதைப்பொருளும் நீதிமன்றில் பாரப்படுத்தப்படும் என்று மதிவரி அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, அண்மைய நாள்களில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் 600 கிலோவுக்கு மேற்பட்ட கஞ்சா போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-07)

## விசாரணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது குறித்த நிலைமைகளை ஆராய்வதற்கென உயர் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தலைமையில் அடுத்த வாரம் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கு வரவுள்ள அதிகாரிகள் குழுவினருடன், வடக்கு மாகாண ஆளுநரும் இணைந்து கொள்ளவுள்ளார்.

## கொரோனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டு இருக்கலாம் என்ற சந்தேகத்தில் யாழ். போதனா வைத்தியசாலையில் வவுனியாவைச் சேர்ந்த 24 வயதுடைய பெண் ஒருவர் நேற்று முன்தினம் சேர்க்கப்பட்டார்.

நோயாளியின் குருதி மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைக்குக் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அதன் பரிசோதனை அறிக்கை கிடைக்கும் வரை யாழ். போதனா வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு விடுதியில் தனிமைப்படுத்தப்பட்டு அவருக்கு உரிய சிகிச்சைகள் வழங்கி வருகின்றோம்.

எனினும் குருதி மாதிரிகளின் பரிசோதனை அறிக்கை வரும் பட்சத்தில்தான் அவருக்கு ஏற்பட்ட வைரஸ் தொற்று தொடர்பில் கூறமுடியும் என்றும் பணிப்பாளர் குறிப்பிட்டார். (ஐ-07)

## கல்முனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்தார்.

கல்முனை வடக்கு உப பிரதேசசெயலகம் 1993ஆம் ஆண்டு ஒரு இனக்குழுவினரால் பிரிக்கப்பட்டது. அப்போதுவிட்ட தவறு இப்போது இன ரீதியாகத் தனிமைப்படுத்தக் காரணமாக அமைந்துள்ளது. எனவே அதனைத் தரமுயர்த்துவது அவசியமாகும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

கல்முனை உப பிரதேச செயலகத்தை தரம் உயர்த்துவது தொடர்பில் ஆராயும் கூட்டம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் பொதுநிர்வாக, உள்நாட்லுவல்கள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன், இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கஜன் இராமநாதன், சதாசிவம் வியாழேந்திரன், எச்.எம்.எம். ஹரிஸ் மற்றும் தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம் அதாவுல்லா, கிழக்கு மாகாண ஆளுநர், அதிகாரிகள் பங்கேற்றனர்.

இதன்போது கருத்து வெளியிட்ட அதாவுல்லா, கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் இன ரீதியாக பிரிக்கப்படவேண்டுமா? அதனைத் தவிர்த்து இனங்களுக்கு இடையே ஒற்றுமையை ஏற்படுத்துவோம் என தமிழ் உப பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துவதற்கு எதிராக தனது கருத்தை முன்வைத்தார்.

ஏனைய முஸ்லிம் பிரதிநிதிகளும் உப பிரதேச செயலகத்தை எதிர்ப்பை வெளியிட்டனர்.

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகம் போரைக் காரணமாகக் கொண்டு இன ரீதியாகவே ஒரு இனத்தவர்களால் முன்னர் பிரிக்கப்பட்டது. அந்த இனத்தவர்களின் தவறே தற்போது பெரியளவில் பிரச்சினையாக எழுந்துள்ளது. ஒரு இனத்தவர்களுக்கு பிரதேச செயலர், கணக்காளர் சேவையாற்றும்போது, ஒரு இனத்தவர்கள் புறக்கணிக்கப்படுகிறனர். எனவே இந்த விடயத்தில் தீர்க்கமான முடிவை எட்டவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

அனைவரது கருத்தை செவிமடுத்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, கல்முனை வடக்கு உப பிரதேச செயலகம் 1993ஆம் ஆண்டு ஒரு இனக்குழுவினரால் பிரிக்கப்பட்டது. அப்போதுவிட்ட தவறு இப்போது இன ரீதியாகத் தனிமைப்படுத்த காரணமாக அமைந்துள்ளது. எனவே அதனை தரமுயர்த்துவது அவசியமாகும் என்று முஸ்லிம் பிரதிநிதிகளுக்குத் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

எனவே கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவதற்கு முதல் பணியாக எல்லை நிர்ணயத்தை முன்னெடுப்போம். அதற்கு எல்லை நிர்ணயச் சபை உடனடியாக அமைத்து அறிக்கையைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று பொது நிர்வாக, உள்நாட்டு அமைச்சின் செயலாளரைப் பிரதமர் பணித்தார்.

எல்லை நிர்ணயத்தை ஏற்றுக்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரிஸ், எவரும் பாதிக்கப்படாத வகையில் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தினார்.

நேற்றைய கூட்டத்தில் கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை தரமுயர்த்தவேண்டும் என்று வலியுறுத்தி உணவு ஒறுப்புப் போராட்டத்தை முன்னெடுத்தவர்கள் பங்கேற்கவில்லை என்பதுடன் நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் வியாழேந்திரனும் கூட்டத்தின் இறுதியிலேயே பங்கேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தமிழ்ப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார். அவரது பண்ணை வீட்டுக்கு முன்னால், வீதியில் சட லம் நேற்றுக் காலை மீட்கப்பட்டது.

இந்தக் கொலையுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் இருவரைத் தாங்கள் கைது செய்துள்ளனர் என வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவரும் மட்டக்களப்பு, புதூர் 7ஆம் குறுக்கு வீதியைச் சேர்ந்த 55 வயதுயுடைய 3 பிள்ளைகளின் தந்தையான தம்பாப்பிள்ளை சிவராசா என்பவரே அடிகாயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தப் பொலிஸ் உத்தியோகத்தர் நேற்று முன்தினம் இரவு வவுணதீவு, ஆயித்தியமலை வீதியிலுள்ள மூன்றாங்கட்டைப் பிரதேசத்தில் தனது பண்ணைக்குச் சென்றிருந்தார். இரவு 11 மணியளவில் பண்ணையில் இருந்து வீதிக்கு வந்தபோது அங்கு இருவர் பதுங்குவதை கண்டு, யார் எனவும் கேட்ட போது, அவர்கள் நாங்கள் மது அருந்துகின்றனர் எனத் தெரிவித்துள்ளனர்.

இதன்போது பொலிஸ் உத்தியோகத்தர், 'இல்லை நீங்கள் மாடு களவு எடுக்க வந்துள்ளீர்களா?' எனக் கேட்ட போது அவர்கள் அந்த உத்தியோகத்தருடன் வாக்குவாத்தில் ஈடுபட்டனர். அவர்களுக்கும் பொலிஸ் உத்தியோகத்தருக்கும் இடையில் சண்டை மூண்டதை அடுத்து உத்தியோகத்தரை இருவரும் அங்கிருந்த பொல்லால் தலையில் தாக்கியுள்ளனர். அடுத்து அவர் வீதியில் உயிரிழந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனை அடுத்து அவரின் உடலை இழுத்து வீதியின் ஓரத்தில் போட்டுவிட்டு இருவரும் தப்பி ஓடியுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட அரிசி ஆலை ஒன்றில் வேலை செய்துவரும் ஆயித்தியமலை தேவாலய வீதயைச் சேர்ந்த 31 வயதுடைய முகமட் அஸ்மி, வவுணதீவு, நாவற்குடா, ஈச்சந்தீவைச் சேர்ந்த குணசேகரன் சுரேந்திரன் ஆகியோரிடம், பொலிஸார் நடத்திய ஆரம்ப விசாரணையிலேயே இந்தத் தகவல்கள் தெரியவந்துள்ளன.

கைது செய்யப்பட்ட முகமட் அஸ்மி மேற்படி உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தரின் தாக்குதலில், அடிகாயங்கள் உள்ளாகியிருந்தார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு நீதிவான் ஏ.சி. றிஸ்வான் சம்பவ இடத்திற்கு சென்று சடலத்தை பார்வையிட்டு சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறு உத்தரவிட்டார். இதனை அடுத்து சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பிரேத அறையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுணதீவு பொலிஸார் மேற்கொண்டு வருவருகின்றனர்.

## பொதுத் தேர்தலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேட்புமனு பங்கீடு , தேசியப்பட்டியல் எம்.பி. நியமனப் பகிர்வு உட்பட்ட பல பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்குமெனவும் தேர்தலின் பின்னர் பங்காளிக் கட்சிகள் இணைந்தால் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தையும் பெறலாமெனவும் கணிக்கப்படுவதாகத் தெரிகிறது.

இதன்படி,ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, தேசிய சுதந்திர முன்னணி, ஜனநாயக இடதுசாரி முன்னணி, பிவிதுரு ஹெல உறுமய, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, தேசிய காங்கிரஸ் ஆகிய கட்சிகளைத் தனித்தனியாக போட்டியிட வைத்துத் தேர்தலின் பின்னர் அவர்களை ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைத்துக் கொள்வது குறித்து ஆலோசிக்கப்படுகிறது.

தேர்தல் ஒன்று அறிவிக்கப்படவுள்ள நிலையில் வேட்பாளர்களாக போட்டியிடப் பலர் முன்வந்துள்ளமையும், தேசியப்பட்டியல் பெற பலர் காத்திருக்கும் சூழ்நிலையும் இந்த யோசனைகளுக்கான காரணமெனத் தெரிகிறது.

இது குறித்து பஸில் ராஜபக்ஷ கட்சி முக்கியஸ்தர்களிடம் மந்திராலோசனைகளை நடத்தி வருகிறார். (ஐ)

## பாக்.விமானப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரிகளும் இலங்கைக்கு

வருகை தந்துள்ளனர் எனக் கூறப்படுகின்றது. அவர் முக்கிய இராணுவ அதிகாரிகளை சந்தித்து பேசவுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்.சமூகத்துக்கே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பகிடிவதை தொடர்பில் வெளியாகும் தகவல்கள் அதிர வைப்பனவாக உள்ளன.

பாதிக்கப்பட்ட மாணவர்கள் (குறிப்பாக மாணவிகள்) தங்கள் எதிர்காலம் மற்றும் கல்வி குறித்த அச்சத்தால் உண்மைகளை வெளிப்படையாக அம்பலப்படுத்த அஞ்சுகின்றமையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, மாணவர்களின் பெயரில் இயங்கும் சில கொடூரப் பண்பியல்பும் வக்கிர சிந்தனையும் கொண்ட மனநோயாளர்கள் மேற்கொள்ளும் கொட்டம் கட்டு மீறியிருக்கின்றது. தங்கள் அராஜகங்களை அவர்கள் எல்லை மீறிக் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றார்கள்.

அதை முற்றாகத் தடுத்து நிறுத்த லாயக்கற்ற – அல்லது கையாலாகாத– அல்லது அதற்கு விருப்பமற்ற – அல்லது இக் கொடூரங்களைப் புரியும் 'கிரிமினல்களை' பகிரங்கமாக அம்பலப்படுத்தத் துணிச்சலற்ற, கோழைத்தனமான – அல்லது அவர்களைப் பாதுகாக்கும் கூட்டு மனநிலை கொண்ட – அல்லது நமக்கேன் வீண்வம்பு என்று பொறுப்பற்று செயற்படுகின்ற – சக பல்கலை மாணவர்களும், அவர்களின் மாணவர் அமைப்புகளும் தங்களின் விட்டேத்தியான இந்தச் செயற்போக்கால் பகிடிவதை புரியும் கிரிமினல்களுக்குத் தங்களை அறியாமலேயே கவசமாகி நிற்கின்றார்கள் என்பதுதான் விசனத்துக்குரியது என்பதை 'காலைக்கதிர்' ஆசிரியபீடம்

வேதனையுடன் சுட்டிக்காட்ட விரும்புகின்றது.

தங்கள் மத்தியில் முன்னெடுக்கப்படும் பகிடிவதை என்ற கிரிமினல் போக்கைத் தடுக்க இலாயக்கும் விருப்பும் அற்ற அமைப்புகள் எல்லாம் தமிழர் தேசியம் பேசிக் கொண்டு, கரிநாளுக்கு அழைப்பு விடுப்பதும், அரசியல் விவகாரங்களில் மூத்த அரசியல் கட்சிகளையும், தலைவர்களையும் வழிநடத்த முற்படுவதும், அத்தரப்புகளின் கருத்துகளுக்கு 'காலைக்கதிர்' போன்ற அனைத்து ஊடகங்களும் முக்கியத்துவம் கொடுப்பதும் சமூக அபத்தமாகும்.

பகிடிவதை என்ற கிரிமினல் தனம் நடக்கவில்லை, அதை நிரூபித்துக் காட்டுங்கள் என்று

மாணவர் அமைப்புகள் விதண்டாவாதம் பண்ணினால் அதன் மூலம் அந்தக் கிரிமினல் கொடூரத்துக்கு தாமும் துணைபோகின்றார்கள் என்பதை அந்த அமைப்புகள் உணர வேண்டும்.

பகிடிவதைக்கு எதிராக வெறும் வாய்ப்பந்தல் அறிக்கை வெளியிடுவதோடு மாணவர் அமைப்புகள் பொறுப்பிலிருந்து தப்பிவிடலாம் என்று எண்ணமுடியாது; எண்ணக் கூடாது.

சொல்லிலும் செயலிலும் அதைச் செய்து காட்டாமல் இந்த விவகாரம் குறித்து மாணவர் அமைப்புகள் அதிகப்பிரசங்கித் தனமாக நடக்குமானால் அவற்றை அம்பலப்படுத்துவதற்காகவும், சமூகக் கிரிமினல்களைத் தோலுரித்துக் காட்டவும், மாணவர் அமைப்புகளின் பிரதிநிதிகள் என்ற உயரிய பொறுப்பில் இருந்து கொண்டு பகிடிவதை கொடூரம் புரியும் கிரிமினல்களைப் பாதுகாக்கும் பிரகிருதிகளின் முகமூடிகளைக் கிழித்து, அவர்களை சமூகத்தின் முன் பகிரங்கப்படுத்தவும் ஊடகங்களை அணிதிரட்டிக் காத்திரமான நடவடிக்கை எடுத்து, தன் சமூகக் கடமையை 'காலைக்கதிர்' நிறைவு செய்யும் எனத் தன் வாசகர்களுக்கு அது இச்சமயத்தில் உறுதி கூற விரும்புகிறது.

(பகிடிவதை தொடர்பில் மற்றொரு செய்தி 14 ஆம் பக்கத்தில்)

## திருகோணமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது..

திருமலை அரச அதிபராகக் கடமைபுரிந்த புஷ்பகுமார சேவையிலிருந்து ஓய்வுபெற்று சென்றமையையடுத்து மேலதிக அரச அதிபரான அருந்தவராஜா பதில் அரச அதிபராக கடமையாற்றி வருகிறார்.

இந்நிலையில் புதிய அரச அதிபராக மேஜர் ஜெனரல் ருவான் குலதுங்க விரைவில் கடமைகளை பொறுப்பேற்பார் என தெரிவிக்கப்படுகிறது.

## பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விஜயத்தின்போது சாரநாத், புத்தகயா மற்றும் திருப்பதி உள்ளிட்ட பல்வேறு மத வழிப்பாட்டுத் தலங்களுக்கும் பிரதமர் செல்லவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## விசர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யான பசுபதி சந்திரலிங்கம் (வயது 50) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

சில நாள்களுக்கு முன்னர் அவர் விசர் கடிக்கு இலக்காகி, அதற்கான சிகிச்சையைப் பெறவில்லை. இந்நிலையில், நேற்று முன் தினம் காலை அவருக்கு திடீரெனக் கால் நடுக்கம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து அவர் புதுக்குடியிருப்புப் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இந்நிலையிலேயே, சிகிச்சை பலனின்றி இரவு உயிரிழந்தார். (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000,
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - https://kalaikathir.online

## நமது தமிழ் தலைவர்களின் பதில் யாது?

இலங்கையைப் புரட்டிப் போட்ட கொடூர இனவாத யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் பல நூற்றுக்கணக்கான ஈழத் தமிழர்கள் வலிந்து காணாமலாக்கப்பட்டனர். அவர்களின் உறவுகளின் வலி மிகுந்த வாழ்க்கையும், பேரவல நிலையையும், மனதைக் குடையும் ஆழமான ஆதங்கங்களையும் துச்சமாகக் கருதி, மிகக் கேவலமாகக் கருத்து வெளியிட்டிருக்கின்றார் ராஜபக்ஷக்களின் அரசில் பொறுப்புள்ள அமைச்சரான விமல் வீரவன்ஸ.

காணாமலாக்கப்பட்டோரை மண்ணுக்குள்தான் தேடவேண்டும் என்று திமிர்த்தனமாகப் பதில் கூறியிருக்கும் விமல் வீரவன்ஸவுக்கு எதிராக முழுத் தமிழினத்தின் கோபமும், சீற்றமும், எதிர்ப்பும் ஒருங்கு சேர்ந்து திரும்பியிருக்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அதனை நாடாளுமன்றத்தில் அப்பட்டமாகவே - பகிரங்கமாகவே - வெளிப்படுத்தியிருக்கின்றார்.

நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவரும் ரெலோ தலைவரும் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதனும் அறிக்கை ஒன்றின் மூலம் தனது சீற்றத்தைக் கொட்டியிருக்கின்றார்.

*"காணாமலாக்கப்பட்டோரை மண்ணுக்குள்தான் தேட வேண்டும் எனத் திமிர்த்தனமாகச் சொன்ன விமல் வீரவன்ஸவுக்கு, அப்படிக் காணாமலாக்கப்பட்டோர் எங்கு புதைக்கப்பட்டனர் என்பதும் நன்கு தெரிந்திருக்கும். எனவே காணாமலாக்கப்பட்டோருக்கு ராஜபக்ஷக்கள் மட்டுமல்லர், விமல் வீரவன்ஸவும் பொறுப்புக் கூற வேண்டும்."* என்று சரா எம்.பி.கூறுவது வலிமையான ஒரு வாதமாகும்.

செல்வம் எம்.பியோ இதற்கு ஒரு படி மேலே போய் இந்த விடயத்துக்காக வீரவன்ஸவைப் பொலிஸார் கைது செய்து, இப்படிக் காணாமலாக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என்பதை அவர் மூலம் விசாரித்து , அறிந்து, முழு உலகுக்குமே உண்மையை அம்பலப்படுத்த வேண்டும் என்று கோரியிருக்கின்றார்.

*"இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப் பிரதிநிதி ஹானா சிங்கர், இலங்கையில் இடம்பெற்ற இறுதிப் போரின் போது காணாமலாக்கப்பட்டோர் குறித்துக் கருத்து வெளியிடும் போது, காணாமலாக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்த வேண்டிய கடப்பாடு அரசுக்கு உண்டு எனவும், அது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என ஐ.நா. சபையும் உலக நாடுகளும் எதிர்பார்த்திருக்கின்றன எனவும் தெரிவித்திருந்தார்."* - என்று சரா எம்.பி. சுட்டிக்காட்டுகின்றார்.

இறுதி யுத்த காலத்தில் வலிந்து காணாமலாக்கட்டோர் விடயத்தில் தமது கையை விரித்துப் பொறுப்பை தூசு தட்டுவது போலத் தட்டிக் கைகழுவிவியிருக்கும் ஜனாதிபதி கோட்டாபயவின் கருத்து நிலைப்பாட்டுக்கும் -

காணாமல் போனோரை மண்ணுக்குள் போய்த் தேடுங்கள் என்ற அமைச்சர் விமல் வீரவன்ஸவின் திமிர்த்தனமான கருத்துக்கும் -

சரியான பதிலை தரும் மார்க்கத்திலேயே மேற்படி கருத்தை ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி கூறியுள்ளார் என்ற சரா எம்.பியின் கருத்து முற்றிலும் சரியானதுதான்.

பல நூற்றுக் கணக்கானோரின் உயிரோடு சம்பந்தப்பட்ட விடயத்தில் -

பொறுப்புக் கூறல் தொடர்பான சர்வதேச கவனத்தையும் அவதானத்தையும் திரும்பியுள்ள விவகாரத்தில் -

இவை எல்லாவற்றுக்கும் அப்பால் இந்தத் தீவின் எதிர் காலத்துடன் தொடர்புபட்ட நல்லிணக்கம், புரிந்துணர்வு போன்றவற்றுடன் நெருங்கிச் சம்பந்தப்பட்ட சமாச்சாரத்தில்-

ஆயுதமுனையில் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை அழித்தொழித்த மமதையில் பௌத்த, சிங்களப் பேரினவாதம் கர்சிக்கும் ஒரு கொடுங்கோல் போக்கு என்று பாதிப்புற்ற தமிழினம் கருதும் ஒரு முக்கிய அம்சத்தில்-

சிங்களத் தலைமை இப்படித் திமிர்த்தனத்துடன் கருத்து வெளியிடுமானால், அது மிக அவதானத்துடன் கையாளப்பட வேண்டிய விடயமாகும்.

*"உங்கள் தரப்பில் காணாமல் போனோரை மண்ணுக்குள் போய்த் தேடுங்கள் !"* என்று பேரினவாத வெறித்தனத்தில் விமல் வீரவன்ஸ கூறுவது முதலில் அவரோடு அணி சேர்ந்திருக்கும் தமிழ்த் தலைவர்களான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அங்கஜன் இராமநாதன், கருணா, அருண் தம்பிமுத்து போன்றோருக்கும் பேரிழுக்கான விடயமாகும்.

இது குறித்து ராஜபக்ஷக்கள், வீரவன்ஸக்கள் மட்டுமல்லர், அவர்களோடு அணி சேர்ந்திருக்கும் ஏனைய தமிழ்த் தலைவர்களும் கூடப் பதில் கூறத்தான் வேண்டும்.

உணர்வோடும், உயிர் வலியோடும் ஆயிரம் நாள்களுக்கு மேல் மழை, வெயில், குளிர், பகல், இரவு பாராது தங்கள் உறவுகளின் நிலையறியப் போராடி வரும் தமிழ் சகோதரர்களுக்கு, தங்களுடன் அணி சேர்ந்திருக்கும் விமல் வீரவன்ஸவின் இத்தகைய திமிர்த்தனமான - துடுக்குத்தனமான - கருத்துக் குறித்து இந்தத் தமிழ்த் தலைவர்கள் பதில் தர வேண்டும்.

இது தமிழின உணர்வோடு விளையாடும் பேரினவாதத்தின் மமதைப் போக்கு. அதற்கு எதிராக உணர்வோடு மீறிட்டு எழாமல் அடக்கி வாசித்தால், அது பதவிக்காகத் தென்னிலங்கையிடம் யாசகம் பெறும் அற்பத்தனமாகவே தமிழ் மக்களால் பார்க்கப்படும். சம்பந்தப்பட்ட தலைவர்களுக்கு இக் கருத்துச் சமர்ப்பணம்.

# தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆரம்ப காலப் பெயரை ஈ.பி.ஆர்.எல்.எவ். பயன்படுத்த அனுமதிக்கவே முடியாது!

## ஆனந்தசங்கரி திட்டவட்டம்



கொழும்பு,பெப்.07

'தமிழர் ஐக்கிய முன்னணி' என்ற பெயரை ஏன் ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பிற்கு வழங்கக் கூடாது என்பதை விவரித்து, தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தேர்தல் ஆணைக்குழுவிற்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தின் விவரம் வருமாறு: -

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) கட்சியின் பெயர் மாற்றம் செய்தல் தொடர்பாக தங்களின் DE/PE/1/43/35 இலக்க கடிதம் சம்பந்தமானது -

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியும், அதிலிருந்து 1949 ஆம் ஆண்டு பிரிந்து சென்ற குழுவினரால் ஆரம்பித்து இயங்கி வந்த தமிழரசுக் கட்சியும் மீண்டும் ஒன்றிணைந்து செயற்பட தீர்மானித்திருந்தன.

1972 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் திகதி திருகோணமலையில் இவ்விரு கட்சிகளின் உறுப்பினர்களும் கூடி இரு கட்சியையும் இணைத்து 'தமிழர் ஐக்கிய முன்னணி' என்ற பெயரைச் சூட்டி இயங்க ஆரம்பித்தனர்.

இப் புதிய கட்சியின் ஆரம்பகால உறுப்பினர்களாக இரு கட்சி உறுப்பினர்களும் மற்றும் பலரும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். திரு சா.ஜே.வே. செல்வநாயகம் அவர்களின் தலைமையில் புதிய நிர்வாகக் குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

1976 ஆம் ஆண்டு நடைபெற்ற கட்சியின் மாநாட்டில் ஏகமனதாக எடுக்கப்பட்ட தீர்மானத் திற்கமைய கட்சியின் பெயர் தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF) என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தொடர்ந்து இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி அமோக வெற்றியீட்டியது. இருப்பினும் தொடர்ந்து தேவைப்பட்ட வேளைகளில் இப்பெயர் மாற்றம் பற்றி தெரிவித்து வந்துள்ளோம்.

திருவாளர்கள் சா.ஜே.வே.செல்வநாயகம், ஜீ.ஜீ பொன்னம்பலம் ஆகியோரால் புதியபெயர் மாற்றப்பட்டமையால் போலும், அதற்குரிய செல்வாக்கை EPRLF தமக்காக ஆக்கிக்கொள்ள முனைவது போல் தெரிகின்றது.

ஓரிரு சந்தர்ப்பங்கள் தவிர்ந்து பல சந்தர்ப்பங்களில் இக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு மாறாகவே செயற்பட்டு வந்துள்ளது. 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியினுடைய செயற்பாட்டை முறியடிக்க இரா.சம்பந்தன் அவர்களின் தலைமையில் இயங்கிய தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் இணைந்து தேர்தலில் போட்டியிட்டது.

ஜனநாயகப் பாரம்பரியத்தை மீறிச் செயற்பட்டு தமிழர் விடுதலைக் கூட்டணிக் கட்சியை அத் தேர்தலில் போட்டியிட விடாது சதி செய்தமையால், அக்கட்சி குறித்த தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அத் தேர்தலிலேதான் தமிழ்ப் பகுதிகளிலே ஜனநாயக கோட்பாடுகள் முற்றாகக் குழிதோண்டி புதைக்கப்பட்டன. அதுமாத்திரமல்ல, 'தமிழர் ஐக்கிய முன்னணி' உருவாக்கப்பட்ட வேளையில் இயங்கி வந்த ஆயுதக்குழுக்களில் ஒன்றேனும் எதுவித ஒத்துழைப்பும் கொடுக்காமல் 'தமிழர் ஐக்கிய முன்னணியை செயற்படவிடாது தடுக்க முயற்சித்து வந்தமை உலகறிந்த உண்மை.

நான் இங்கு விசேடமாக குறிப்பிட விரும்புவது யாதெனில், எமது கட்சியின் ஆரம்பகால பெயரை எவரும் உபயோகிக்க முயற்சிப்பது கட்சியினுடைய வளர்ச்சியை மிகக் கடுமையாக பாதிக்கும். அதனால் இப்பெயரை உபயோகிக்கும் உரிமை எமது கட்சியினுடையதாக இருக்க வேண்டும்.

அவ்வாறு மாற்றம் செய்யப்படால் எமது கட்சியின் வரலாற்றையும், வளர்ச்சியையும் பாதிக்கும் என்பதால் இப்பெயர் மாற்றும் கோரிக்கையை நிராகரிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன். - என்று உள்ளது.

# அகில இலங்கை சைவ மகா சபையின் விருது வழங்கலும் சஞ்சிகை வெளியீடும்

## இலங்கைவேந்தன் கலைக்கல்லூரியில்

யாழ்ப்பாணம்,பெப்.07

அகில இலங்கை சைவ மகா சபையின் அன்பே சிவம் விருது வழங்கலும் சஞ்சிகை வெளியீடும் தைப்பூச தினமான நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சபையின் தலைவர் சிவத்திரு நா.சண்முகரத்தினம் தலைமையில் யாழ்ப்பாணம், நராவியடி, இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மகப்பேற்று மருத்துவ நிபுணர் வைத்திய கலாநிதி நமசிவாயம் சரவணபவ 'அன்பே சிவம்' விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார்.

இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான தொழில்நுட்ப பீடங்களின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் சி.சிறிசற்குணராசா, ஆசிரிய கலாசாலை ஓய்வுநிலை விரிவுரையாளர் சி.குணசீலன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதி வைத்தியர் சு.ரவிராஜ், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஏ.தேவநேசன், சுதேச மருத்துவத் திணைக்கள வடமாகாண ஆணையாளர் வைத்தியர் திருமதி சி.துரைரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் ஆசியுரைகளை நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், தென்கயிலை ஆதீன முதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகளார், சின்மயா மிசன் வடமாகாண வதிவிட ஆச்சாரியார் தவத்திரு சீதாகாசானந்தா சுவாமிகள் ஆகியோர் வழங்குவர்.

சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன், மானிடம் அறக்கட்டளை முன்னாள் தலைவர் சிவத்திரு இ.செல்வநாயகம் ஆகியோர் வாழ்த்துரை ஆற்றுவர். சைவ மகா சபையின் பொதுச் செயலாளர் வைத்தியர் பரா.நந்தகுமார் தொடக்கவுரை ஆற்றுவார்.

மேலும், சைவ மகா சபையின் பொருளாளர் அருள்.சிவானந்தன், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை தாதிய பரிபாலகர் சோ.இராசேந்திரன் ஆகியோர் பாராட்டுரை ஆற்றுவர்.

'அன்பே சிவம்' சஞ்சிகையின் முதற்பிரதியை பசுக்கள், இடபங்களைப் பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் தொழிலதிபர் கு.கங்கைவேணியன் பெற்றுக்கொள்வார்.

### நாளை 08.02.2020 - சனிக்கிழமை

நட்சத்திரம்: பூசம் சித்தம் மு.இ. 10.02 வரை
திதி : சதுர்த்தசி பி.ப. 03.35 வரை
இராகுகாலம் : 09.35 - 11.05
சுப நேரம் : 03.35 - 05.05

# திருகோணமலையில் நேற்று பஸ்கள் மோதி ஒருவர் சாவு!



## 28 பேர் காயமுற்று வைத்தியசாலையில்





திருமலை, பெப். 07

திருகோணமலை தம்பலகாமம் 99ஆம் கட்டைப் பகுதியில் நேற்று அதிகாலை இரண்டு பஸ்கள் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார். 28 பேர் காயமடைந்துள்ளனர்.

கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்த பஸ், 99ஆம் கட்டைப் பகுதியில் பயணிகளை இறக்கி கொண்டிருந்த பஸ்ஸூடன் மோதி விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்தில் தனியார் பஸ்ஸின் உதவியாளரே உயிரிழந்துள்ளார்.

சாரதி படுகாயமடைந்த நிலையில் கந்தளாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளளார்.

விபத்தில் உயிரிழந்த தனியார் பஸ்ஸின் உதவியாளர் பதுளையைச் சேர்ந்த 22 வயதுடைய துசாந்த என இனங்காணப்பட்டுள்ளார்.

விபத்தில் காயமடைந்தவர்களை கந்தளாய், தம்பலகாமம் மற்றும் திருகோணமலை பொது வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் காயமடைந்த 11 பேர் கந்தளாய் வைத்தியசாலையிலும், 9 பேர் தம்பலகாமம் வைத்தியசாலையிலும், 8 பேர் திருகோணமலை வைத்தியசாலையிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து ஏற்பட்டது தொடர்பான காட்சி வர்த்தக நிலையம் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி கமராவில் பதிவாகியுள்ள நிலையில், விபத்து தொடர்பில் தம்பலகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)



## 10 கிலோ கேரளக் கஞ்சா மாதகலில் பிடிபட்டது

யாழ்ப்பாணம், பெப். 07

மாதகல் பகுதியில் 10 கிலோ கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதாகக் கடற்படையின் ஊடகப் பேச்சாளர் இசுறு சூரிய பண்டார தெரிவித்தார்.

கடற்படையின் புலனாய்வு அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய நேற்று முன் தினம் புதன்கிழமை மேற்கொண்ட திடீர்ச் சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது கஞ்சா கைப்பற்றப்பட்டதாக கடற்படையின் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

கைப்பற்றப்பட்ட கஞ்சா போதைப் பொருள் இளவாலை பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

## ரிப்கானின் மறியல் நீடிப்பு

கொழும்பு, பெப். 0

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் சகோதரர் ரிப்கான் பதியுதீனின் விளக்கமறியல் தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்று சந்தேக நபர் கொழும்பு பிரதான நீதவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டார்.

இதன்போதே அவரை எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

மன்னார் – தலைமன்னார்ப் பகுதியில் உள்ள 240 இலட்சம் பெறுமதியான நிலமொன்றுக்கு போலி உறுதிப்பத்திரம் தயாரித்து மோசடி செய்தனஎனத்தெரிவிக்கப்பட்டு இவர் கடந்த 22ஆம் திகதி குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## காங்கேசன்துறைமுக அபிவிருத்திக்கு 35 ஏக்கர் தனியார் காணி சுவீகரிப்பு

கொழும்பு, பெப். 07

காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு துறைமுகத்துக்கு அண்மையாக உள்ள 35 ஏக்கர் தனியார் காணிகளை இழப்பீட்டைச் செலுத்தி அரசுடமையாக்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திக்காக 50 ஏக்கர் காணியை இலங்கை துறைமுக அதிகார சபைக்கு பெற்றுக்கொடுக்கும் வகையில் துறைமுகம் மற்றும் கடல்நடவடிக்கைகள் அமைச்சர் ஜோன்சன் பெர்னாண்டோ முன்வைத்த அமைச்சரவைப் பத்திரத்துக்கமையவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:

காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்காக துறைமுகத்துக்கு அருகில் சுமார் 50 ஏக்கர் காணியை இலங்கை துறைமுக அதிகார சபையிடம் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கு அமைவாக, துறைமுகத்துக்கு அருகாமையில் 15 ஏக்கர் அரசுக்கு சொந்தமான காணி ஒன்றை 5கோடி 20 லட்சம் ரூபா செலுத்தப்பட்டமைக்கு அமைவாக பொறுப்பேற்பதற்கும், தனியார் உரித்துடைமையின் கீழ் மேலும் 35 ஏக்கர் காணிக்கு இழப்பீட்டைச் செலுத்திக் காணியை பெற்றுக் கொள்ளும் சட்ட விதிகளுக்கு உள்பட்டதாக பொறுப்பேற்பதற்கும் என்று அமைச்சரவைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து அடுத்த அமைச்சரவையில் இறுதி முடிவெடுத்து ஒப்புதல் வழங்குவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## அம்பாறையில் கருணா களமிறங்கத் தீர்மானம்

மட்டக்களப்பு, பெப். 07

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் தாம் போட்டியிடத் தீர்மானித்துள்ளார் எனத் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் பிரதியமைச்சருமான கருணா அம்மான் என்று அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் குறிப்பிட்டார்.

கல்முனை உப பிரதேச செயலக முன்றிலில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 10 மணியளவில் கட்சி ஆதரவாளர்களைச் சந்தித்த பின்னர், நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள திறமைமிக்க புத்திஜீவிகள், இளைஞர்களை இணைத்துக்கொண்டு தனித்துவமாக போட்டியிடுவதற்கு தீர்மானித்துள்ளேன்.

ஐக்கிய தேசியக் கட்சியானது அழிந்துபோகின்ற ஒரு கட்சியாகத்தான் காணப்படுகின்றது. கல்முனை வடக்கு உப பிரதேச செயலகம் தரம் உயர்த்தும் என்ற விடயத்தில் நற்செய்தியொன்று கிடைத்துள்ளது.

கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து இதை உடனே தரம் உயர்த்தி தரவேண்டும் என்று அழுத்தமாகக் கூறினேன் – என்றார். (ஐ)

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE

உலகெங்குமிருந்து

உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.

உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப

WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.

No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

# காஷ்மீர் விவகாரத்தில் மோடி பெரும் தவறு செய்து விட்டார்

## பாக். பிரதமர் இம்ரான் விசனம்

இஸ்லாமபாத்,பெப்.07

காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்தை ரத்து செய்து இந்தியப் பிரதமர் மோடி மிகப்பெரிய தவறைச் செய்து விட்டார் என்ற. பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் தெரிவித்துள்ளார்.



பாகிஸ்தானில் ஆண்டு தோறும் பெப்ரவரி 5 ஆம் திகதி காஷ்மீர் ஒருமைப்பாட்டுத் தினமாகக் கொண்டாடப்படுகிறது. இந்த நிகழ்வையொட்டி பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீரில் உள்ள முசாபர்பாத்தில் உள்ள சட்டப்பேரவையில் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் பேசினார்.

அப்போது இம்ரான் கான் கூறியவை வருமாறு –

காஷ்மீருக்குச் சிறப்பு அந்தஸ்தை ரத்து செய்து இந்திய பிரதமர் மோடி மிகப்பெரிய தவறைச் செய்து விட்டார். இந்துத் தேசியவாதம் என்ற பூதம் குடுவையில் இருந்து வெளிவந்து விட்டது. அதை மீண்டும் உள்ளே கொண்டு செல்ல முடியாது. பாகிஸ்தானுக்கு எதிராகப் பேசி மக்களை வைத் தேர்தலில் வென்றதால் மோடி இத்தகைய நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

இது போன்ற தொடர் நடவடிக்கைகள் காஷ்மீருக்கு விடுதலையை பெற்று தரும். காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்படாமல் இருந்திருந்தால், இந்த விவகாரம் உலக நாடுகளின் கவனத்தை பெற்றிருக்காது. 7 முதல் 10 நாள்களில் பாகிஸ்தானை முடித்து விடுவோம் என்று மோடி பேசுகிறார். சாதாரண மனிதர் கூட இப்படிப் பேச மாட்டார்.

காஷ்மீர் விவகாரத்தில் இருந்து உலக நாடுகளின் கவனத்தை திசை திருப்ப இந்தியாவுக்கு எந்த வாய்ப்பையும் பாகிஸ்தான் வழங்காது. காஷ்மீர் விவகாரம் குறித்து அமெரிக்க அதிபர் டிரம்பிடம் மூன்று முறை பேசியுள்ளேன் – என்றார்.

# நடிகர் விஜய்யைக் குடைகின்றனர் வருமான வரித்துறை அதிகாரிகள்!

'பிகில்' படத்துக்கு வாங்கிய சம்பளம், அதற்கு கட்டிய வருமான வரி ஆகியனகுறித்து நடிகர் விஜய்யிடம் 2ஆவது நாளாக வருமான வரித்துறையினர் நேற்றும் விசாரணை நடத்தினர்.

'பிகில்' படத்தை விநியோகம் செய்த பைனான்சியர் அன்புச்செழியன் வீடுகளில் நேற்று ஒரே நாளில் 65 கோடி ரூபா ரொக்கம் சிக்கியுள்ளது.



சென்னை பனையூரில் உள்ள விஜய்யின் வீட்டில் நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவுக்கு வந்த வருமான வரித்துறையினர் திடீர் சோதனை நடத்தினர். பிறகு இரவு 9 மணியளவில் அங்கு அழைத்து வரப்பட்ட விஜய்யிடமும் வருமான வரித்துறையினர் 10 பேர் விசாரணை நடத்தினர்.

அப்போது 'பிகில்' படத்தின் சம்பளம் தொடர்பாக கிடைத்த ஆவணங்கள் குறித்து விசாரணை நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. பிறகு 7 பேர் வெளியேறிய நிலையில், 3 பேர் மட்டும் விஜய்யிடம் விடிய விடிய விசாரணை நடத்தினர்.

இந்நிலையில் நேற்றுக் காலை மேலும் 6 அதிகாரிகள் விஜய் வீட்டுக்கு வந்தனர். அவர்களும் ஏற்கெனவே விசாரணை நடத்திய 3 பேருடன் சேர்ந்து, விஜய்யிடம் தொடர்ந்து விசாரணை நடத்தினர்.

விசாரணையின்போது விஜய் வீட்டில் அவரைத் தவிர்த்து வேறு யார் இருந்தார்கள் என்பது குறித்தோ, பணம் எதுவும் கைப்பற்றப்பட்டதா என்பது குறித்தோ தகவல் தெரியவில்லை. காலை பத்து மணி அளவில் ஸ்விக்கி மூலம் ஆர்டர் செய்யப்பட்ட உணவு விஜய் வீட்டிற்கு வந்து டெலிவரி செய்யப்பட்டது.

இதனிடையே வரி ஏய்ப்பு தொடர்பாக கிடைத்த தகவலின்பேரில், ஏ.ஜி.எஸ். நிறுவன அலுவலகங்கள், திரையரங்குகள், ஏ.ஜி.எஸ். உரிமையாளர் கல்பாத்தி அகோரத்தின் வீடு உள்ளிட்ட இடங்களில் வருமான வரித்துறையினர் 2வது நாளாக சோதனை நடத்தி வருகின்றனர்.

இதேபோல் பிகில் படத்தை சென்னை மற்றும் செங்கல்பட்டு ஏரியாக்களில் விநியோகம் செய்த பைனான்சியர் அன்புச்செழியனுக்கு சொந்தமான சென்னை மற்றும் மதுரையிலுள்ள வீடுகள், அலுவலகங்களிலும் வருமான வரித்துறையினர் 2 ஆவது நாளாக நடத்திய சோதனையில் 65 கோடி ரூபா ரொக்கம் சிக்கியுள்ளது. சென்னையில் 50 கோடி ரூபாவும், மதுரையில் 15 கோடி ரூபாயம் ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

நேற்று ஏ.ஜி.எஸ். மற்றும் அன்புச் செழியன் தொடர்புடைய இடங்களில் நடத்தப்பட்ட சோதனையில் 24 கோடி ரூபா சிக்கியதாகக் கூறப்படுகிறது. ஒட்டு மொத்தமாக இந்த சோதனையில் தற்போது வரை 89 கோடி ரூபா சிக்கியுள்ளது.

# தமிழகத்தில் உள்ள ஈழத் தமிழர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்க முடியாது

## இந்திய மத்திய அரச திட்டவட்டம்

புதுடில்லி,பெப்.07

தமிழ்நாட்டில் உள்ள இலங்கை தமிழ் அகதிகளுக்கு இரட்டை குடியுரிமை வழங்குவது சாத்தியமில்லை என மத்திய அரசு தெரிவித்திருக்கிறது.

இதுத்தொடர்பாக, மாநிலத்தில் ஆளும் அ.தி.மு.க., தி.மு.க. உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகள் நீண்ட நாள்களாகக் கோரிக்கை விடுத்து வருகின்றன. இது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருவதாக, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஈவும் கூறியிருந்தார்.

இந்நிலையில், புதுச்சேரி அ.தி.மு.கழக எம்.பியான கோகுலகிருஷ்ணன், மாநிலங்களவையில் எழுப்பிய கேள்விக்கு, மத்திய உள்துறை இணையமைச்சர் நித்யானந்த் ராய் எழுத்துப்பூர்வமாக பதிலளித்தார்.

அதில், அரசமைப்புச் சட்டப்பிரிவு 9 இன் கீழ், இரட்டைக் குடியுரிமை வழங்க இயலாது என்றார்.



எனவே, இலங்கைத் தமிழர்களுக்கு இரட்டை குடியுரிமை வழங்குவதற்காக, ஒப்பந்தம் செய்யும் திட்டம் எதுவுமில்லை என்றும், உள்துறை இணையமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

# டெல்லியில் ஓய்ந்தது பிரச்சாரம் நாளை தேர்தல்; 11 இல் முடிவுகள்



டெல்லி சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் நேற்று மாலையுடன் ஓய்ந்தது.

70 உறுப்பினர்களைக் கொண்ட டெல்லி சட்ட சபைக்கு வருகிற நாளை தேர்தல் நடக்கிறது. இதில் ஆளும் ஆம்ஆத்மி, பாரதிய ஜனதா, காங்கிரஸ் ஆகிய 3 கட்சிகள் இடையே கடும் போட்டி நிலவி வருகிறது.

ஆம்ஆத்மி கட்சி ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ளும் வகையில் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறது. டெல்லியில் ஆட்சியை கைப்பற்றிவிட வேண்டும் என்ற முனைப்புடன் பா.ஜ.க. செயல்பட்டு வருகிறது.

நேற்று மாலையுடன் இந்த தேர்தலுக்கான பிரச்சாரம் முடிவடைந்தது.

பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா, டெல்லி முதலமைச்சர் கெஜ்ரிவால், காங்கிரஸ் கட்சி சார்பில் ராகுல் காந்தி உள்ளிட்ட பல தலைவர்கள் தங்கள் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

நாளை வாக்களிப்பு முடிந்த பின்னர் எதிர்வரும் 11 ஆம் திகதி வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படவிருக்கின்றன.

# தண்ணிருக்குப் பதில் சாராயம் வீட்டுப் பைப்பில் கொட்டியது

திருவனந்தபுரம்,பெப்.07

சினிமாவில் பண்ணைத் தோட்டத்து பம்பு செட்டில் தண்ணீருக்கு பதில் சாராயம் கொட்டிய காட்சி போல் கேரளாவில் சாலக்குடியில் உண்மையாக நடந்துள்ளது.

நடிகர் சந்தானம் நடித்த படம் ஒன்றில் தேர்தலுக்கு வாக்குப் போட கிராமத்தில் உள்ள ஆண்களுக்கு பண்ணை தோட்டத்து பம்பு செட்டில் தண்ணீருக்கு பதில் சாராயத்தை கொட்டிய காட்சி ஒன்று இடம் பெறும்.

தமிழ் சினிமாவில் கற்பனையாக காட்டப்பட்ட இக்காட்சி கேரளாவில் சாலக்குடியில் உண்மையாக நடந்துள்ளது. சாலக்குடி பஸ் நிலையம் அருகே 18 வீடுகளை கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு உள்ளது. இந்த வீடுகளுக்கு, அருகில் உள்ள கிணற்றில் இருந்து தான் குடி தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது. மோட்டார் பம்ப் மூலம் கிணற்று நீர் தண்ணீர் தொட்டிக்கு ஏற்றப்பட்டு அனைத்து வீடுகளுக்கும் குழாய் மூலம் வழங்கப்படுகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அடுக்குமாடிக் குடியிருப்பின் அருகில் வசிக்கும் ஜோஷி மாளியேக்கல் என்ற பெண் தண்ணீர் எடுக்க மோட்டாரை ஓன் செய்தார். சிறிது நேரத்தில் அவரது வீட்டுத் தண்ணீர் தொட்டி நிரம்பியது.

பின்னர் சமையல் அறைக்குச் சென்று குழாயைத் திறந்தார். அதில் இருந்து கொட்டிய நீர் கலங்கலாக இருந்தது. கிணற்றில் சகதி காரணமாக தண்ணீர் கலங்கி இருக்கலாம் என்று கருதிய அந்த பெண், தண்ணீரை முகர்ந்து பார்த்தார். அதில் சாராய வாடை அடித்தது.

உடனே ஜோஷி மாளியேக்கல் அடுக்குமாடி குடியிருப்பில் உள்ள வீடுகளிலும் உள்ள குடி தண்ணீர்க் குழாய்களைத் திறந்து பார்க்கக் கூறினார். அனைத்து வீடுகளிலும் உள்ள குழாய்களில் சாராயமே வந்தது. இதைக்கண்டு பெண்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

குழாயில் சாராயம் வந்தது எப்படி? என்பது தெரியாமல் குழம்பினர். இதுபற்றி சாலக்குடி நகராட்சியில் முறைப்பாடு செய்தனர்.

நகராட்சி அதிகாரிகள் குடியிருப்புப் பகுதிக்கு சென்று ஆய்வு செய்தனர். குடியிருப்புக்கு குடிதண்ணீர் வழங்கும் கிணற்றிலும் சோதனை நடத்தினர். அப்போது கிணற்றிற்குச் சற்று தொலைவில் கேரள மதுவிலக்கு பொலிஸார் கடந்த சில நாள்களுக்கு முன்பு பறிமுதல் செய்த பலலிட்டர் கள்ளச்சாராயத்தை கிணற்றுக்கு அருகே குழி தோண்டிக் கொட்டியமை தெரிய வந்தது.

கிணற்றுக்கு அருகில் கொட்டப்பட்ட கள்ளச்சாராயம் ஊற்றுபோல கிணற்றுக்குள் கலந்து, கிணற்று நீரே சாராயமாகி போனது தெரிய வந்தது.

இதையடுத்து அந்த கிணற்றை நகராட்சி அதிகாரிகள் சுத்தப்படுத்தி வருகிறார்கள். துணை கமினர் ஷானு கூறும்போது, கிணற்றை 8 முறைக்கு மேல் சுத்தப்படுத்தி விட்டோம். இனியும் சுத்தப்படுத்தி வருகிறோம் என்றார்.

# துருக்கியில் விமானம் தரையிறங்கும் போது ஓடுபாதயை விட்டு விலகி சறுக்கிப் பிளந்தது

## உடனே தீப் பற்றியதில் 3 பேர் பலி, 179 பேர் காயம்





இஸ்தான்புல்,பெப்.07

துருக்கியில் விமானம் தரையிறங்கும் போது ஓடுபாதையில் இருந்து சறுக்கி விபத்துக்குள்ளானது. இதில் மூன்று பயணிகள் உயிரிழந்தனர். விமானத்தில் பயணம் செய்த 183 பயணிகளில் 179 பேர் காயம் அடைந்தனர்.

துருக்கியின் ஏஜியன் நகரில் இருந்து 189 பயணிகளுடன் பெகாசஸ் ஏர்லைன்ஸ் நிறுவனத்திற்கு சொந்தமான விமானம், இஸ்தான்புலில் உள்ள சபிஹா ஹோக்கன் விமான நிலையத்தில் தரையிறங்கியது. உள்ளூர் நேரப்படி மாலை 6.19 மணியளவில் தரையிறங்கிய விமானம் ஓடுபாதையில் இருந்து சறுக்கி 60 மீற்றர் விலகிச்சென்று மோதி நின்றது. இந்த விபத்தில் விமானம் இரண்டாக உடைந்தது. மேலும்தீபிடிக்கதொடங்கியதில் பயணிகள் அச்சம் அடைந்தனர்.

விரைந்து வந்த மீட்புக்குழுவினர் பயணிகளை மீட்டு மருத்துவமனையில் அனுமத்தினர். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பயணிகளில் 3 பேர் சிகிச்சை பலனளிக்காமல் உயிரிழந்தனர். விமானத்தில் பயணம் செய்த 183 பயணிகளில் 179 பேர் காயம் அடைந்தனர் எனவும் அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் துருக்கி சுகாதாரத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

விமானம் இரண்டாக உடைந்து நிற்கும் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றன. விமானம் விபத்துக்குள்ளனது பற்றி துருக்கி அரசு விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.

# டிரம்பை பதவி நீக்கும் பிரேரணை அமெரிக்க செனட்டில் தோல்வி!



வொஷிங்டன்,பெப்.07

அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப்புக்கு எதிரான பதவி நீக்கப் பிரேரணை அமெரிக்க செனட் சபையில் தோற்கடிக்கப்பட்டது.

அமெரிக்காவில் அதிபர் டிரம்ப் தன் சொந்த அரசியல் ஆதாயத்திற்காக அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தினார் எனப் பல்வேறு முறைப்பாடுகள் கூறப்பட்டுள்ளன. குறிப்பாக எதிர்க்கட்சியின் அதிபர் வேட்பாளர் ஜோ பிடனுக்கு எதிராக உக்ரைன் நாட்டில் சதி திட்டம் தீட்டினார் எனவும், உக்ரைன் அதிபரிடம் பிடனுக்கு எதிராக சதி செய்யப் பேரம் பேசினார் எனவும் முறைப்பாடு கூறப்பட்டது.

இதையடுத்து டிரம்ப் மீதான புகாரை விசாரிக்க பிரதிநிதிகள் சபை அனுமதி அளித்தது. அதன்படி விசாரணை நடத்தப்பட்டது. விசாரணை முடிந்ததையடுத்து டிரம்பை பதவி நீக்கம் செய்வது தொடர்பாக பிரதிநிதிகள் சபையில், தகுதி நீக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதையடுத்து, செனட் சபையில் டிரம்புக்கு எதிரான பதவி நீக்க பிரேரணை மீது வாக்கெடுப்பு நடந்தது. செனட் சபையில், டிரம்பின் குடியரசுக் கட்சியினர் பெரும்பான்மை வகிப்பதால், இந்தப் பிரேரணை எளிதாகத் தோற்கடிக்கப்பட்டது. 52 – 48, 53 – 47 என்ற வாக்குகளின் அடிப்படையில் பதவி நீக்கப் பிரேரணை தோல்வி அடைந்தது.

# பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமானத்தில் குண்டு நிரப்பப்பட்ட துப்பாக்கி!

இங்கிலாந்து முன்னாள் பிரதமர் டேவிட் கேமரூனின் பாதுகாவலர் விமானத்தில் துப்பாக்கியை மறந்து வைத்து விட்டு வந்தமை குறித்து விசாரிக்கப்பட்டு வருகிறது.

லண்டனில் இருந்து நியூயோர்க் செல்லும் பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமானத்தின் கழிவறையில் குண்டுகள் நிரப்பப்பட்ட துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

துப்பாக்கியுடன் பாஸ்போர்ட் இருந்ததைக் கண்டுபிடித்த அதிகாரிகள் அது பற்றி விசாரித்த போது, துப்பாக்கியும் பாஸ்போர்ட்டும் இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர் டேவிட் கேமரூனின் பாதுகாவலருக்குச் சொந்தமானவை என்பது தெரியவந்தது.

பின்னர் தீவிர விசாரணைக்குப் பின்னர் விமானம் ஒரு மணி நேரம் தாமதமாகப் புறப்பட்டுச் சென்றது.

# பிறந்து 30 மணி நேரத்தில் கொரனோ வைரஸ் பாதிப்பு

## வுகானில் பச்சிளம் சிசுவின் நிலை



வுகான்,பெப்.07

சீனாவில் கொரனோ வைரஸ் மிக மோசமாகப் பரவிவரும் வுகான் பகுதியில் பிறந்து 30 மணி நேரமே ஆன சின்னஞ்சிறு பெண் குழந்தைக்கும் கொரனோ வைரஸ் தொற்று பரவியிருப்பதுஉறுதிசெய்யப்பட்டுள்ளது.

உலகிலேயே மிகவும் குறைந்த வயதுடைய - கொரனோ பாதிப்புடைய - நோயாளி இந்த குழந்தைதான். தாயின் பேறு காலத்தில் இந்த நோய் கருப்பையில் உள்ள குழந்தைக்குப் பரவியிருக்கலாம் என்று மருத்துவர்கள் கருதுகின்றனர்.

கடந்த வாரம் பிறந்த அந்த குழந்தைக்கு பிறந்த உடனே நோய் தாக்கியிருக்கலாம் என்றும் கருதப் படுகிறது.



# பனிச்சரிவில் சிக்கியவர்களை மீட்கச் சென்ற 33 பேர் மரணம்

துருக்கியில் பனிச்சரிவில் சிக்கியவர்களை மீட்கச்சென்று மீண்டும்பனியில் சிக்கி 33 பேர் வரை உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

வேன் மாகாணத்தின் பாசெசேஹிர் நகரில் செவ்வாய்க்கிழமை பனிச்சரிவு ஏற்பட்டது. மலைப் பாதையில் ஏற்பட்ட அந்தப் பனிச் சரிவில் 2 பேர் சிக்கினர். அவர்களை மீட்பதற்காக 300 பேர் அடங்கிய மீட்புக் குழு வரவழைக்கப்பட்டது. அவர்கள், பனிச்சரிவில் மாயமானவர்களைத் தேடும் பணியில் 2ஆவது நாளாக நேற்று முன்தினமும் ஈடுபட்டிருந்தனர். அப்போது மீண்டும் பெரிய அளவிலான பனிச்சரிவு ஏற்பட்டதில் மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் சிக்கினர்.

இந்த விபத்தில் சிக்கிய 8 வீரர்கள் உயிரிழந்தனர். மேலும் மாயமான 25 பேரை தேடும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

குறிப்பிட்ட நேரம் முடிவடைந்துள்ளதால் மாயமான 25 பேரும் உயிரிழந்திருக்கலாம் என துருக்கி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.










## இம்மைக்கும் மறுமைக்கும் நற்பலனைத் தரக்கூடிய ஸ்ரீ மகா உருத்திர யாகம் இன்று முதல் திங்கள் வரை

### அருள்மிகு நல்லூர் சிவன் தேவஸ்தானத்தில்

ஸ்ரீ மகா உருத்திர யாகமானது ஏனைய யாகங்களை விட சிறந்ததாகும். இராமாயணக் காலத்திலும் மகாபாரதக் காலத்திலும் மன்னர்கள் பல யாகங்கள் செய்து சிறந்த பலனை அனுபவித்திருக்கின்றார்கள்.


கலியுகத்தில் மக்களால் யாகங்கள் செய்விக்கப்பட்டு வருகின்றன. மகான்கள் பலர் யாகங்களைச் செய்து அதன் பலனை சர்வ உலகத்திற்கும் கிடைக்கச் செய்திருக்கின்றார்கள்.

இவ் உலகத்திலுள்ள உயிர்கள் உய்யும் பொருட்டு உருத்திர தாண்டவம் நிகழ்த்தும் இறைவனை நாம் இவ் யாகத்தைச் செய்வதன் மூலம் மகிழ்ச்சியடையச் செய்கின்றோம்.

ஸ்ரீ ருத்ரம் நமசிவாய" ஐந்தெழுத்து அடக்கிய கருவூலமாகத் திகழ்தலின் ருத்ர மந்திரத்தைக் கேட்கும் பாக்கியம் பல கோடி வருடங்களுக்குப் பலனை அளிக்கவல்லது என நடராஜ சதகம் போன்ற நூல்களில் கூறப்பட்டுள்ளது.

மஹா ருத்ரத்தைப் பற்றி யஜுர் வேதத்தில் 'ஒரு மனிதன் தன்னுடைய வாழ்நாளில் தேவைகள் என எதை எதை நினைக்கிறானோ அவை அனைத்தையும் கொடுக்கவல்லது, மேலும் இந்த மஹா ருத்ரத்தில் பங்கு கொண்டோர் அனைவரும் மறுபிறவி எனும் பிணியிலிருந்து நீங்கி மோட்சத்தில் ஒப்பனை சிவபதவியை அடைவார்கள்' எனக் கூறப்படுவதிலிருந்து இந்த மஹா ருத்ர யாகத்தின் சிறப்பை அறிந்து கொள்ளலாம்.

வேத சிவாகமங்களையும் திருமுறைகளையும் அருளிய சிவபெருமானை வேதசிவாகம திருமுறைகளாலும் பஜனை வழிபாட்டாலும் மகிழச்செய்து, சிவபெருமானுக்கு யாகங்களில் தலையாயதாகவும் சிறப்பு வாய்ந்ததாகவும் கருதப்படுகின்ற 1331 ஸ்ரீ ருத்ர மந்திர ஆவர்த்தி ஜெபமும் தசாம்சமாக 121 ஆவர்த்தி ஹோமங்களையும் உள்ளடக்கிய ஸ்ரீ மஹா ருத்ர யாகம் உலகியல் காணப்படுகின்ற அனைத்து ஜீவ ராசிகளின் க்ஷேமத்திற்காகவும் உலக நன்மைக்காகவும் ஈழ வழ நாட்டின் சுபீட்சத்திற்காகவும் வருங்காலத்தில் ஏற்படவுள்ள இயற்கைச் சீற்றங்களிலிருந்து மக்களைப் பாதுகாக்க வேண்டியும் அனைத்து நோய் நொடிகளிலிருந்து மக்கள் விடுபடவும், வருங்காலத்தில் எந்த நோய்களும் இந்தப் பூமியைத் தாக்கா வண்ணம் இருக்கவும், இலங்கைத் திருநாடு மீண்டும் சிவபூமியாகவும், ஸ்வர்ண பூமியாகத் திகழவும் எல்லா லோகங்களும் சுபீட்சமாக இருக்கவும் வேண்டி இலங்கை வடபால் யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்துள்ள அருள்மிகு நல்லூர் சிவன் தேவஸ்தானத்தில் விகாரி வருடம் தைத் திங்கள் 24ஆம் நாள் (07.02.2020) இன்று வெள்ளிக்கிழமை காலை தொடக்கம் தைத்திங்கள் 27ஆம் நாள் (10.02.2020) திங்கட்கிழமை மதியம் வரை தொடர்ந்து நான்கு நாட்கள் ஆறு காலங்களாக மிகச் சிறப்பாக வேத சிவாகம முறைப்படி நடைபெற திருவருள் கைகூடியுள்ளது.



## இந்து சமயப் பேரவை நடத்துகின்ற திருமுறை விழாவில் விருது வழங்கல்

யாழ்ப்பாணம், பெப்.07


நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மலை 4 மணி முதல் யாழ்ப்பாணம் பலாலி வீதியில் உள்ள இந்து சமயப் பேரவையில் இடம்பெற உள்ள திருமுறை விழாவில் பல பெரியார்கள் கௌரவ விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளார்கள்.

நயினாதீவு நாகபூணி அம்மன் ஆலய அறங்காவலர் கு.சரவணபவானந்தன் அவர்களுக்கும், சைவப் பாதுகாப்பு சபைத் தலைவர் இ.திருவாதவூரன் அவர்களுக்கும் 'திருமுறைக் காவலர்' விருதும், மன்னாரைச் சேர்ந்த அர்ச்சுனராஜா நற்குகன் அவர்களுக்கு 'திருமுறைச் செல்வர்' விருதும், சுழிபுரத்தை சேர்ந்தன. ஆனந்தவடிவேலு, வட்டுக் கோட்டையைச் சேர்ந்த திருவாசகமணி நடராஜ தங்கராஜா, கந்தர்மடத்தைச் சேர்ந்த செ.சிவபுரநாதன், சுதுமலையைச் சேர்ந்த பொ.பாலசிங்கம், நல்லூரைச் சேர்ந்த ப.பாலசுப்ரமணியம், திருநெல்வேலியைச் சேர்ந்த ந.சர்வகுணசீலன் ஆகியோருக்கு 'திருமுறைப் பராயணச் செல்வர்' எனும் விருதும் யாழ்பாணத்தைச் சேர்ந்த திருமதி வீ.பத்மநாதன், திருமதி!ஆ. புஸ்பவதி, சுண்டுக்குழியைச் சேர்ந்த திருமதி திலகவதி ஆறுமுகம் , புத்தூரைச் சேர்ந்த செல்வி இராசமலர் வல்லிபுரம் ஆகியோருக்கு 'திருமுறைப் பராயணச் செல்வி' எனும் விருதும் வழங்கப்படுகின்றன.

வே.விநாசித்தம்பி பொற்கிழி வழங்கி கௌரவிக்கப்படுவார்.

தமிழ்நாட்டை சேர்ந்த பண்ணிசைக் கலைஞர்களான புகழேந்தி மகேஸ்வரன் அவர்களுக்கு 'தேவார இசை ஞானத் திலகம்' எனும் விருதும், கோகுலாசாரி ஸ்ரீராம் அவர்களுக்கு 'இசைஞானத் திலகம்' எனும் விருதும், தியாகராஜன் மோகன்ராஜா அவர்களுக்கு 'லய ஞானதிலகம்' எனும் விருதும், சண்முகம் விஷ்ணு அவர்களுக்கு 'பண்ணிசைச் செல்வர்' என்னும் விருதும் திருவருட்டுணை கொண்டு வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது என இந்து சமயப் பேரவை தெரிவித்துள்ளது.

## நாளை தைப்பூச நன்னாள்



தைப்பூசம் என்பது உலகெல்லாம் கட்டிக்காக்கும் அன்னை பராசக்தி – பரமசிவன் மைந்தன் முருகப்பெருமானுக்கு கொண்டாடப்படும் விழாவாகும்.

தை மாதம் தமிழர்களுக்கு புனிதமான மாதமாகும். முருகனுக்கு உகந்த நாள் தைப்பூச தினம் என்பர். தைப்பூசம் ஆண்டுதோறும் தை மாதம் (தமிழ் பஞ்சாங்கப்படி பத்தாவது மாதம். இது பூஸா மாதம் என்றும் அறியப்படும்) பூச நட்சத்திரமும் பௌர்ணமி திதியும் கூடி வரும் நன்நாளில் முருகனுக்கு எடுக்கப்படும் விழாவாகும். நட்சத்திர வரிசையில் பூசம் எட்டாவது நட்சத்திரமாகும். இவ்விழா முழு நிலவு பூச நட்சத்திரத்திற்கு வரும் நேரம் நடத்தப்படுகிறது.

தைப்பூசத்தன்று தான் உலகம் தோன்றியதாக ஐதீகம்.

முருகன் தமிழ்க்கடவுள் ஆவார். முருகன் என்றால் அழகு என்று பொருள். முருகன் தேவ சேனாதிபதி (தேவர்களின் சேனாதிபதி) ஆகையால் இவர் ஒரு போர்க்கடவுள் ஆவார். தை பூசத்தன்று முருகன் தருகாசுரனை வதம் செய்த நிகழ்வு ஒரு விழாவாக பழனியில் அனுஷ்டிக்கப்படுகிறது.

சிவபெருமான் உமாதேவியுடன் இருந்து சிதம்பரத்தில் ஆனந்த நடனம் ஆடி, தரிசனம் அளித்த நாள் தைப்பூசம் என்பர்.

சிதம்பரத்திற்கு வந்து அரும் பெரும் திருப்பணிகள் செய்து, நடராஜரை இரணியவர்மன் என்னும் மன்னன் நேருக்கு நேராகத் தரிசித்தது இந்நாளிலேயே. இக்காரணங்களுக்காகவே சிவன் கோயில்களில் தைப்பூசத்தன்று சிறப்பு அபிஷேகங்களுடன் பூஜைகள் நடத்தப்படுகின்றன.

தேவர்களில் குருவாகிய பிரகஸ்பதியின் நட்சத்திரம் பூசம் என்பதால் தைப்பூசத்தன்று குருவழிபாடு செய்வது மிகுந்த பலனைத் தரும் என்பர்.

வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் ஒரு தை மாத வெள்ளிக்கிழமை புனர்பூச நட்சத்திரத்தன்றுதான் ஒளியானார். இதனைக் குறிக்கும் விதமாக அவர் ஒளியான வடலூருக்கு அருகில் உள்ள மேட்டுக்குப்பத்தில், தைப்பூசத்தன்று இலட்சக்கணக்கானோர் கூடி வள்ளலார் விழாவைக் கொண்டாடுகிறார்கள்.

தைப்பூசத்தன்று அதிகாலையில் எழுந்து குளித்துவிட்டு முருகனை வழிபடுவர். முருகன் பிறந்த தினமாக அறியப்படுவதால் முருகன் கோவில்களில் சிறப்பு பூஜைகள் நடைபெறும். மேலும் காவடி எடுத்தல் மற்றும் பால் குடம் தூக்குதல் போன்ற நிகழ்வுக்கு பிறகு கோவிலில் அன்னதானம் வழங்ககப்படும். மக்கள் கோவில்களில் முருகனை வேண்டி வழிபடுவது வழக்கம் .

# ஐ.தே.க. செயற்குழு கூட்டம் திங்கள் வரை ஒத்திவைப்பு!



கொழும்பு, பெப். 07

ஐக்கிய தேசியக்கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் திங்கட்கிழமைவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் சிறிகொத்தாவில் நேற்று செயற்குழுக் கூட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையிலேயே அது பிற்போடப்பட்டுள்ளது.

சஜித் பிரேமதாஸ தலைமையில் மலரவுள்ள புதிய அரசியல் கூட்டணிக்கான பொதுச் செயலாளரை நியமிப்பது, புதிய கூட்டணியின் சின்னம், பெயர் என்பன தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டு இறுதி முடிவு எடுக்கப்படும் என ஐக்கிய தேசியக்கட்சி எம்.பியொருவர் தெரிவித்தார்.

புதிய அரசியல் கூட்டணியின் பொதுச் செயலாளராக ரஞ்சித் மத்தும பண்டாரவை நியமிப்பதற்கு ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளிக் கட்சித் தலைவர்கள் அண்மையில் தீர்மானம் எடுத்திருந்தனர்.

இதன்பிரகாரம் ரஞ்சித் மத்தும பண்டாரவை பொதுச் செயலாளராக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பெயரிட்டார். இந்த முடிவுக்கு ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்றக்குழு நேற்றுமுன்தினம் அனுமதி வழங்கியது.

பொதுச்செயலாளரைப் பெயரிடுவதற்கான அதிகாரம் சஜித்துக்கு வழங்கப்பட்டிருந்தாலும் அவரின் முடிவுக்கு கட்சியின் மத்திய குழுவின் அனுமதி அவசியம் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவேதான் இவ்விவகாரம் பற்றி மேலும் ஆராயும் நோக்கில் ரணில் தரப்பால் செயற்குழுக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, புதிய அரசியல் கூட்டணியின் பொதுச் செயலாளர் பதவிக்கு நவீன் திஸாநாயக்க நியமிக்கப்படவேண்டும் என்பதே ரணில் தரப்பின் கோரிக்கையாக இருந்து வருவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. (ஐ)

# மத்திய அதிவேக நெடுஞ்சாலை ஒப்பந்தத்தில் நல்லாட்சி மோசடி

## நாடாளுமன்றில் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 07

மத்திய அதிவேக நெடுஞ்சாலைத் திட்டத்தில் ஊழல் இடம்பெற்றுள்ளதாக நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பல்போக்குவரத்து அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ குற்றச்சாட்டு ஒன்றை முன்வைத்துள்ளார்.

சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான நாடாளுமன்ற அமர்வின்போது அமைச்சரிடம் இந்த விடயம் தொடர்பாகக் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த அவர், இந்த திட்டத்திற்காக மஹிந்த ராஜபக்ஷ அரசு 250 கோடி ரூபாவுக்கு வழங்கிய ஒப்பந்தம் கடந்த ஐ.தே.க. அரசால் இரத்துச் செய்யப்பட்டு 350 கோடி ரூபாவுக்குவழங்கப்பட்டுள்ளது.

எனவே ஏன் அதிக விலைக்கு வழங்கப்பட்டது என்பது குறித்து விசாரணைகள் தொடங்கப்பட வேண்டும். அரசியல் காரணங்களுக்காக இந்தத் திட்டத்தை நிறுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

எவ்வாறாயினும் மத்திய அதிவேக நெடுஞ்சாலை திட்டத்தை விரைவாக மேற்கொள்ள தற்போதைய அரசு முயற்சித்து வருகிறது.

அந்தவகையில் மீரிகமவை குருநாகலுடன் இணைக்கும் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகள் இந்த ஆண்டு ஓகஸ்ட் மாதத்திற்குள் நிறைவடையும் – என்றார். (ஐ)

# இலகுரக வாகன சாரதி அனுமதிப்பத்திர மருத்துவச் சான்றிதழை அரச வைத்தியசாலைகள் ஊடாக வழங்க அமைச்சரவை அனுமதி

கொழும்பு, பெப். 07

இலகுரக வாகனங்களுக்கு சாரதி அனுமதிப் பத்திரத்துக்கு சமர்ப்பிக்கும் மருத்துவ பரிசோதனைச் சான்றிதழை அரச வைத்தியசாலைகளில் பெற்றுக்கொள்வதற்கு அதிகாரம் வழங்கும் யோசனைக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

இந்த மருத்துவச் சான்றிதழ் தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம் தயாரித்த வடிவமைப்பின் படி வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்துக்குரிய கட்டணத்தைப் பிரதேச செயலகங்கள் அல்லது தபால் நிலையங்கள் மூலம் செலுத்த முடியும் என்றும் அமைச்சரவைப் பத்திரத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன் தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்துக்கே அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இதுதொடர்பான சுற்றறிக்கை நாட்டிலுள்ள 150 அரச வைத்தியசாலைகளுக்கு போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சினால் விரைவில் அனுப்பிவைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அரச வைத்தியசாலைகளில் இலகுரக வாகன சாரதி அனுமதிப்பத்திர விண்ணப்பதாரிகளுக்கு மருத்துவ சான்றிதழ்களை விரைவாக வழங்குவதற்கான வசதிகளை விரைவுபடுத்தவும் அமைச்சரவை அறிவுறுத்தல் வழங்கியுள்ளது. (ஐ)

# ரஷ்ய இராணுவத் தளபதி கோட்டாபயவுடன் பேச்சு

கொழும்பு, பெப். 07

ரஷ்ய இராணுவத் தளபதி ஜெனரல் ஒலேக் சல்யுகோவ் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்தார்.

கடந்த 03ஆம் திகதி இலங்கைக்கு வந்த ரஷ்ய இராணுவத் தளபதி, 72ஆவது தேசிய சுதந்திர தின விழாவில் விசேட விருந்தினராகக் கலந்து கொண்டார்.

ஜெனரல் ஒலேக்குடன் இலங்கைக்கு வருகை தந்துள்ள ரஷ்ய இராணுவத்தின் உயர்மட்டப் பிரதிநிதிகளும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.(ஐ)



# 53,000 பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்க அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, பெப். 07

வேலையற்ற பட்டதாரிகளுக்கு எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி முதல் அரச திணைக்களங்கள் - நிறுவனங்களில் பயற்சி வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற அமைச்சரவையிலேயே இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பாடத்துறைக்கு அமைய ஒதுக்கப்படும் திணைக்களங்களில், ஒரு வருடம் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளமையுடன் அதன்பின்னர் அரச சேவைகளில் நிரந்த நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

பயிற்சிகளைப் பெறும் காலப்பகுதியில் 22 ஆயிரத்து 500 ரூபா மாதாந்தக் கொடுப்பனவும் பட்டதாரி பயிலுநர்களுக்கு வழங்கப்படவுள்ளது. அரச தரவுகளின் பிரகாரம் நாடு முழுவதும் சுமார் 53 ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 13 ஆயிரம் கோடி ரூபாவுக்கு குறை நிரப்புப் பிரேரணை

## அனுமதி கோரியது அரசு

கொழும்பு, பெப். 07

கடந்த அரசால் செலுத்தப்படாதக் கொடுப்பனவுகளை செலுத்தவதற்காக 13 ஆயிரம் கோடி ரூபா குறை நிரப்புப் பிரேரணைக்கான நாடாளுமன்ற அனுமதியை அரசு கோரியுள்ளது.

கடந்த அரசின் செலவுகள் மற்றும் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை குறித்து நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் பிரதமர் மஹிந்த விளக்கினார்.

அத்தோடுஇந்தகுறைநிரப்புபிரேரணை தொடர்பான முழுமையான வடிவம் இன்னும் சில தினங்களில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்றும் மஹிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

இருப்பினும் இந்த குறை நிரப்பு பிரேரணை தொடர்பாக நாடாளுமன்றில் விவாதம் இடம்பெறவேண்டும் என எதிர்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ கேட்டுக் கொண்டார்.

கடந்த அரசின் நிலுவைத் தொகையை வழங்குவதற்கான நாடாளுமன்றத்தில் குறை நிரப்பு பிரேரணையை சமர்ப்பிக்கும் திட்டத்திற்கு அமைச்சரவை ஏற்கனவே அங்கீகாரம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



காலைக்கதிர்
Kalaikathir






# நியூசிலாந்து அபார வெற்றி

இந்தியா மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான முதலாவது ஒருநாள் போட்டியில் நியூசிலாந்து அணி 06 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள விராட் கோஹ்லி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி, 5 போட்டிகள் கொண்ட ரி – 20 தொடரை 5 – 0 என்ற கணக்கில் முழுமையாகக் கைப்பற்றி வரலாறு படைத்தது.

இதனை அடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் போட்டி நேற்று முன்தினம் ஹமில்டனில் இடம்பெற்றது. இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது. இதன்படி இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது.

உபாதை காரணமாக நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் தொடக்க வீரர்களான ஷிகர் தவான் மற்றும் ரோஹித் சர்மா ஆகியோர் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

இந்நிலையில், தொடக்க வீரர்களாக களம் இறங்கிய இளம் வீரர்களான பிரித்வி ஷா மற்றும் மயங்க் அகர்வால் ஆகியோர் சற்று அதிரடியாக ஆடினர். ஆனால் மிகப்பெரிய அளவில் அவர்களால் ஓட்டங்களைக் குவிக்கவில்லை.

பிரித்வி ா 20 ஓட்டங்களிலும் அகர்வால் 32 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். இதையடுத்து அணித்தலைவர் விராட் கோஹ்லி, ஷ்ரேயஸ் ஐயர் ஜோடி இணைந்தது.

நிதானமாக ஆடிய கோஹ்லி அரைசதம் கடந்த நிலையில் 51 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இதையடுத்து கே.எல் ராகுல் களமிறங்கினார். ஒரு புறம் ஷ்ரேயஸ் ஐயர் நிதானமாக ஆட மறுமுனையில் கே.எல் ராகுல் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

சிறப்பாக விளையாடிய ஷ்ரேயஸ் ஐயர் சர்வதேச ஒருநாள் போட்டிகளில் தனது முதல் சதத்தை பதிவு செய்தார். அவர் 107 பந்துகளில் 11 நான்கு ஓட்டங்கள் மற்றும் ஒரு சிக்சர் உட்பட 103 ரன்கள் குவித்து ஆட்டமிழந்தார். மற்றொருபுறம் அதிரடியாக விளையாடிய ராகுல் 64 பந்துகளில் 6 சிக்சர்கள் மற்றும் 3 பவுண்டரிகள் உட்பட 88 ஓட்டங்கள் குவித்தார்.

இறுதியாக நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் முடிவில், இந்திய அணி 4 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 347 ஓட்டங்களைக் குவித்தது.

பதிலுக்கு 348 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் நியூசிலாந்து அணி களமிறங்கியது.

அந்த அணியின் தொடக்க வீரர்களாக மார்டின் குப்டில், நிகோலஸ் ஆகியோர் வலுவான அடித்தளத்தை அமைத்தனர். நடுவரிசையில் வந்த ரோஸ் டெய்லர் மற்றும் ரொம் லாதம் ஆகியோர் அதிரடியாக விளையாடினர்.

இறுதியில் சாட்னர், சிக்ஸரையும் பவுண்டரியையும் பறக்கவிட நியூசிலாந்து அணி 11 பந்துகள் மீதமிருக்க வெற்றி இலக்கை அடைந்தது.

ரோஸ் டெய்லர் தனது 20 ஆவது ஒருநாள் சதத்தைப் பூர்த்தி செய்து, 109 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றிருந்தார்.

நிக்கோலஸ் 78 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். உலகின் முதன் நிலைப்பந்து வீச்சாளர்களான பும்ரா, சமி போன்றவர்களாலும் இறுதியில் நியூசிலாந்தின் வெற்றியைத் தடுக்க முடியாது போனது.

# ரி – 20 உலகக்கிண்ணத்திற்கு ஐ.பி.எல். சிறந்த அடித்தளம்

ரி – 20 உலகக்கிண்ணத் தொடருக்கு தயாராக சிறந்த அடித்தளம் ஐ.பி.எல். தொடர்தான் என்று இந்திய அணித்தலைவர் விராட் கோஹ்லி தெரிவித்துள்ளார்.

ரி – 20 உலகக்கிண்ணத் தொடர் ஆஸ்திரேலியாவில் எதிர்வரும் ஒக்டோபர் 18 ஆம் திகதி முதல் நவம்பர் 15 ஆம் திகதி வரை இடம்பெறுகிறது.

இந்த தொடருக்கு முன் இந்திய அணி நியூஸிலாந்துக்கு எதிராக 3 ஒருநாள் போட்டிகளிலும், தென்னாபிரிக்காவுக்கு எதிராக 3 ஒருநாள் போட்டிகளிலும் விளையாட இருக்கிறது.

உலகக் கிண்ணத்திற்குத் தயாராவதற்கு இந்த ஆறு போட்டிகளும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் என இந்திய அணியின் தலைமை பயிற்சியாளர் ரவி சாஸ்திரி ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் அடுத்த மாதம் தொடங்கும் ஐ.பி.எல் தொடர்தான் ரி – 20 உலகக் கிண்ணத்திற்கு தயாராகுவதற்கு சரியான அடித்தளம் என்று விராட் கோஹ்லி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்–

நாங்கள் ஐந்து ரி – 20 போட்டிகளில் விளையாடியுள்ளோம். இன்னும் அதிகமான ரி – 20 போட்டிகள் இல்லை. ஐ.பி.எல் தொடரில் இரண்டரை மாதம் ரி – 20 கிரிக்கெட் போட்டியில் விளையாட இருக்கி றோம். அதை சரியான பயன்படுத்தி கொள் ளலாம். ஐபிஎல் சரியான அடித்தளமாகும்.

ஏனென்றால், கடந்த வருடம் நடைபெற்ற 50 ஓவர் உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கு போதுமான அளவு போட்டிகளில் விளையாட வாய்ப்பு கிடைக்கவில்லை என்றார்.




# கோடைக்கால ஒலிம்பிக் திட்டமிட்டபடி நடக்கும்

ஜப்பானில் நடப்பு ஆண்டு நடைபெறவுள்ள கோடைக்கால ஒலிம்பிக் போட்டிகள், கோடைகால பரா ஒலிம்பிக் போட்டிகள் திட்டமிட்டபடி நடைபெறுமென ஜப்பான் தெரிவித்துள்ளது.

உலகையே அச்சுறுத்திவரும் கொரோனா வைரஸ் காரணமாக, ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறுவது சந்தேகம் என சமூகவலைதளங்களில் செய்திகள் வெளியாகின.

இந்த நிலையில் இந்தச் செய்தி உண்மைக்கு புறம்பானது என ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே தெரிவித்துள்ளார்.

அத்தோடு, ஒலிம்பிக் போட்டிகளைப் பாதுகாப்பாக நடத்துவது குறித்து சர்வதேச ஒலிம்பிக் நிர்வாகம் மற்றும் உலக சுகாதார ஸ்தாபனம் போன்ற அமைப்புக்களுடன் நெருங்கிய தொடர்பில் இருப்பதாகவும் அவர் கூறினார்.

உலகின் மிகப் பெரிய விளையாட்டு தொடரான ஒலிம்பிக் தொடரை நடத்துவதற்கு ஜப்பான் கடந்த இரண்டு வருடங்களாக, பல திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

குறிப்பாக அரசின் பெருமளவான நிதியினால் கடந்த இரண்டு வருடங்களாக உருவாக்கப்பட்டு வந்த பிரமாண்ட விளையாட்டு அரங்குகள் தற்போது போட்டிகளை நடத்தத் தயாராகவுள்ளன.

இந்தக் கோடைக்கால ஒலிம்பிக் தொடரில், வெப்பத்தை கட்டுப்படுத்தும் வகையில் அரங்கத்தின் கூரைகள் மரத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் பார்வையாளர்கள் மற்றும் வீரர்களை குளிர்சியாக வைத்திருக்க முடியுமென வடிவமைப்பாளர்கள் நம்புகின்றனர்.

இந்தக் கோடைக்கால ஒலிம்பிக் தொடரில், பாதுகாப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக, முகத்தின் மூலம் ஒருவரை அடையாளம் காணும் முறைமையை போட்டி அமைப்பாளர்கள் அறிமுகப்படுத்தவுள்ளனர்.

கோடைக்கால ஒலிம்பிக் போட்டிகள், எதிர்வரும், எதிர்வரும் ஜூலை மாதம் 24ஆம் திகதி முதல் ஒகஸ்ட் மாதம் 9ஆம் திகதி வரை, ஜப்பானின் டோக்கியோவில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

206 நாடுகள் பங்கேற்கும் இத்தொடரில், 33 விளையாட்டுகளில் இருந்து 339 விஷ் போட்டிகள் நடைபெறவுள்ளன. இந்த தொடரில் 11,091 போட்டியாளர்கள் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்தோடு, இந்த ஒலிம்பிக் போட்டிகளில், பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் வகையில், கோடைக்கால ஒலிம்பிக் தொடரில், 7 புதிய விளையாட்டுக்கள் அறிமுகப்படுத்தவுள்ளன. இதனை சர்வதேச ஒலிம்பிக் குழுவும் உறுதிப்படுத்தியுள்ளது.

அதேபோல, கோடைகால பரா ஒலிம்பிக் போட்டிகள், எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 25ஆம் திகதி முதல் எதிர்வரும் செப்டம்பர் 6ஆம் திகதி வரை டோக்கியோவில் நடைபெறவுள்ளது

டோக்கியோவில் உள்ள புதிய தேசிய விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள இந்த போட்டித் தொடரில், 540 பிரிவுகளில் 22 விளையாட்டுக்கள் நடைபெறுகின்றன

# நான் கறுப்பு நிறம்தான்!




என் நிறம் கறுப்பு தான், அதனால்தான் நான் விளையாடும் கிரிக்கெட்டை காதலிக்கிறேன் என தென்னாபிரிக்காவின் துடுப்பாட்ட வீரர் டெம்பா பவுமா கூறியுள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் தென் ஆப்பிரிக்கா அணி வெற்றிப்பெற்றது. அந்தப் போட்டியில் பவுமா 98 ஓட்டங்கள் குவித்து, அணியின் வெற்றிக்கு உதவினார்.

பவுமா பார்க்க குள்ளமாக இருக்கிறார், கறுப்பாக இருக்கிறார் என அவரை சமூக வலைத்தளங்களில் பலர் கிண்டலாகப் பேசி வந்தனர். அவர் மீதான இந்த விமர்சனத்துக்கு செய்தியாளர் சந்திப்பில் மனம் திறந்து பேசியுள்ளார் பவுமா.

அவர் கூறுகையில், ஆம், நான் கறுப்புதான். அது என் நிறம், ஆனால் நான் கிரிக்கெட் விளையாடுகிறேன். அதனை காதலிக்கிறேன். நான் தென்னாபிரிக்கா அணியில் தொடர்ந்து நீடிப்பது, என்னுடைய சிறப்பான ஆட்டத்துக்காகத் தான் என நினைக்கிறேன்.

நான் அணியில் இல்லாதபோது என்னுடைய நிறத்தைக் காரணமாக காட்டி பலரும் பேசுவது எனக்கு சங்கடத்தை ஏற்படுத்துகிறது. அணியில் நீடிப்பதும், நீக்குவதும் உலகெங்கிலும் நடக்கிறது.

நான் மட்டுமே அணியிலிருந்து நீக்கப்படுவது போலவும் வேறு யாரும் நீக்கப்படாதமை போலவும் செய்திகள் வருவது வேதனையைத் தருகிறது என்றார் பவுமா.

இப்போது தன்னுடைய ஆட்டத் திறன் குறித்து பேசிய பவுமா அணியின் பயிற்சியாளர் காலிஸ் நான் போர்முக்கு வருவதற்கு பெரிதும் உதவினார். அவருடைய ஒட்டுமொத்த அனுபவத்தையும், துடுப்பாட்ட நுணுக்கத்தையும் எனக்கு கற்று தந்தார் என கூறியுள்ளார்.

# உயிரைப் பறித்த 'பேஸ்புக் ஜூஸ்'!

கொழும்பு, பெப். 07

பேஸ்புக்கில் கூறப்பட்ட ஆரோக்கியத்துக்கான சாறு (ஜூஸ்) பருகிய ஒருவர் கம்பஹாவில் உயிரிழந்துள்ளார்.

36 வயதுடைய அவர் மனைவியிடம் இருந்து பிரிந்து வாழ்கிறார். பேஸ்புக்கில் கூறப்பட்ட படி கஜ மாடராமரத்தின் இலைகளைச் சாறாகப் பிழிந்து அதனை பருகி வந்தார் என உயிரிழந்தவரின் தாயார் சாட் சியம் அளித்துள்ளார்.

கடந்த வார இறுதியில் இந்த சாற்றைப் பருகிய 10 நிமிடங்களில் தனது மகன் சுக வீனமடைந்தார் எனவும், பின்னர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர் மரணமானார் எனவும் அவரது தாயார் கூறியுள்ளார். (ஐ)

# கோண்டாவிலில் கத்திக்குத்து

யாழ்ப்பாணம், பெப். 07

கோண்டாவில் பகுதியில் ஒருவரைக் கத்தியால் குத்தியவர், கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோண்டாவில் வல்லிபுரநாதர் கோவில் நிர்வாகத்துக்குள் ஏற்பட்ட முறுகல் நிலையே இந்தத் தாக்குதலுக்குக் காரணம் என தெரிவிக்கப்படுகின்றது.

கத்திக்குத்தில் காயமடைந்தவர் யாழ்.போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தாக்குதல் நடத்தியவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 13 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ஐ)

# உண்டியல் திருடன் கைது

யாழ்ப்பாணம்,பெப்.07

கோப்பாய் தெற்கு பேச்சியம்மன் கோயில் உண்டியலை நேற்று முன்தினம் அதிகாலை மூன்று மணியளவில் உடைத்து திருட முற்பட்டவரை, கிராம மக்கள் மடக்கிப் பிடித்து கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். இவரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. விசாரணையின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

# உதவியாளரை லொறியுடன் எரித்து கொன்ற சாரதி கைது

திருமலை, பெப். 07

திருகோணமலை – பாலம்போட்டாறுப் பகுதியில் லொறி உதவியாளரை தீமூட்டி எரித்துக் கொலைசெய்த குற்றச்சாட்டின் தேடப்பட்டு வந்த சாரதி நேற்று முன்தினம் இரவு மன்னாரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை – மிகிந்தபுரம் பகுதியைச் சேர்ந்த கந்தசாமி யோகநாதன் (வயது – 47) என்பவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, அவரது மனைவியான கௌரி மனோகரி (37 – வயது) என்பவரையும் தம்பலகாமம் பொலிஸார் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

கடந்த முதலாம் திகதி பாலம்போட்டாறுப் பகுதியில் எரிந்த நிலையில் காணப்பட்ட லொறியில் இருந்து ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார். கந்தசாமி யோகநாதன் என்ற லொறிச் சாரதியே சடலமாக மீட்கப்பட்டார் என்று முன்னதாக நம்பப்பட்டது.

விசாரணைகளை மேற்கொண்ட தம்பலகாமம் பொலிஸார் லொறியில் பயணித்த உதவியாளர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டிருந்த நிலையில், உதவியாளரான அதே பகுதியைச் சேர்ந்த ஹேவகே விஜேதாஸ (வயது – 52) என்பவர் வீடு திரும்பவில்லை எனவும் தெரியவந்தது.

இந்நிலையில் லொறியில் பயணித்த சாரதி தொடர்பில் சந்தேகம் எழுந்தது. சாரதி வீட்டில் அவரது மரணம் தொடர்பில் மரண அறிவித்தல் பதாதைகள் போடப்பட்டிருந்தன. ஆனால், சாரதியான கந்தசாமி யோகநாதன் உதவியாளரை லொறியில் வைத்து தீ மூட்டி எரித்துவிட்டு ஐந்து இலட்சம் ரூபா பணத்தையும் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலையையும் எடுத்துக்கொண்டு தலைமறைவாகி இருப்பதாக பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

தலைமறைவாக இருந்த சாரதியை பொலிஸ் விசேட குழு மன்னாரில் நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் கைது செய்துள்ளனர்.

இதேவேளை, உதவியாளரின் சடலம் உறவினர்களினால் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் மரபணு சோதனைக்காக உடற்பாகங்கள் பகுப்பாய்வு திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன. (ஐ)

# சீனச் சுற்றுலாப் பயணிகள் இலங்கை வருவது நிறுத்தம்

## கொரோனா வைரஸ் தாக்கத்தை அடுத்து

கொழும்பு, பெப். 07

கொரோனா வைரஸ் பரவுவதை அடுத்து இலங்கைக்கு சுற்றுலாக் குழுக்களை அனுப்புவதை சீனா நிறுத்தியுள்ளது. சீனத் தூதரகத்தின் அதிகாரிகள் இலங்கை குடிவரவு அதிகாரிகளுடன் நடத்திய சந்திப்பின்போது இதனை உறுதிப்படுத்தினர்.

கொரோனா வைரஸ் காரணமாக நாட்டுக்குச் சுற்றுலாக் குழுக்களை அனுப்புவதை தாம் நிறுத்தியுள்ளனர் என்று சீன அதிகாரிகள் தங்களுக்குத் தெரிவித்தனர் எனக் குடிவரவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சீனச் சுற்றுலாப் பயணிகள் இலங்கையில் பாகுபாடு காட்டப்படுவதற்குக் காரணம் பயங்கரவாத வைரஸ்தான். சில ஹோட்டல்களும் வணிக நிறுவனங்களும் தங்கள் நாட்டினரைத் திருப்பிவிடுகின்றன என்று சீன அதிகாரிகள் கவலை தெரிவித்தனர். இதுபோன்ற அச்சங்கள் தேவையற்றவை என்று அவர்கள் குடிவரவு அதிகாரிகளுக்கு உறுதியளித்திருந்தனர்.

இதற்கிடையில், குடிவரவு மற்றும் குடிவரவுத் திணைக்களம் சீன நாட்டிலிருந்து சீனாவிலிருந்து விண்ணப்பிக்கும் 'இலவச விசா' வசதி மூலம் இலங்கைக்கு இன்னும் விண்ணப்பிக்க முடியும் என்று கூறியது. எனினும், ஒன்லைன் வருகை விசா வசதி

# விபத்தில் பெண் பலி! இளைஞன் படுகாயம்!!

யாழ்ப்பாணம், பெப். 07

கொடிகாமம் – நெல்லியடி வீதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் துன்னாலையைச் சேர்ந்த 74 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்தார். 21 வயதுடைய இளைஞன் படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்த இராஜேஷ்வரன் ரதன் என்ற இளைஞன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மிதமிஞ்சிய வேகமே விபத்துக்கான காரணம் எனப் பொலிஸார் கூறியுள்ளனர். (ஐ)



# சீனாவுக்கான சேவைகளை மட்டுப்படுத்தும் ஸ்ரீலங்கன்

கொழும்பு, பெப். 07

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் சீனாவுக்கான விமான சேவைகளை மட்டுப்படுத்த முடிவு செய்துள்ளது.

கொரோனா வைரஸ் பரவுவதால் கொழும்பில் இருந்து சீனாவுக்கு ஸ்ரீலங்கன் விமான சேவை மேற்கொள்ளும் மூன்று நகரங்களுக்கான விமான சேவைகள், மட்டுப்படுத்தப்பட்டுள்ளன என ஸ்ரீலங்கன் விமான சேவை தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் பயணிகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ள காரணத்தால் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக, ஸ்ரீலங்கன் விமான சேவை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

பீஜிங், ஷங்காய் மற்றும் கென்டன் நகரங்களுக்கான விமான சேவைகளே, நேற்று முதல் மார்ச் 28 வரை மட்டுப்படுத்தவுள்ளன எனவும் தெரிவித்துள்ளது.

அதன் அடிப்படையில் ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தின் பீஜிங்கிற்கான வாராந்த விமான சேவைகளிகளின் எண்ணிக்கை 4 இலிருந்து 2 ஆகவும், ஷங்காய்க்கான சேவைகள் 4 இலிருந்து 2 ஆகவும், கென்டனுக்கான சேவைகள் 7 இலிருந்து 3 ஆகவும் குறைக்கப்படவுள்ளது.

கொரோனா வைரஸ் பரவலைத் தொடர்ந்து பல வேறு நாடுகளும் சீனாவுக்கான விமான சேவைகளை மட்டுப்படுத்தி வருகின்றன. (ஐ)

# சோதனைச் சாவடிகள் ஏ – 9 வீதியில் அதிகரிப்பு



## இதனால் தமிழ் மக்களுக்கு பாதிப்பு என்கின்றார் சார்ள்ஸ் நிர்மலநாதன்

கொழும்பு, பெப். 07

ஏப்ரல் 21 தாக்குதலுக்குப் பின்னர் வடக்கில் அதிகளவான சோதனைச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் இதன்மூலம் தமிழ் மக்கள் வஞ்சிக்கப்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் சபையில் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றம் நேற்று முன் தினம் பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது.

பிரதமரிடம் நேரடியாக கேள்விகளை எழுப்பி பதில்களை பெற்றுக்கொள்ளும் கேள்வி – பதில் நேரத்தின்போதே இந்த விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

ஏப்ரல் 21 தாக்குதலையடுத்து நாடு தழுவிய ரீதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. வடக்கிலும் சோதனைச்சாவடிகள் அமைக்கப்பட்டன. தற்போது அந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இவ்வாறு அமைக்கப்பட்டுள்ள சோதனைச்சாவடிகளில் மக்கள் ஏற்றி, இறக்கப்பட்டு வஞ்சிக்கப்படும் சூழ்நிலை வடக்கில் நடைபெறுகின்றது.

நாட்டில் குழப்பங்கள் இருந்தால் தமது இராணுவ புலனாய்வைப் பலப்படுத்தி, மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தாத வகையில் பாதுகாப்பை ஏற்படுத்திக்கொடுப்பது அரசாங்கத்தின் கடமையாகும் என்றும் கூட்டமைப்பு எம்.பி. கூறினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நான் பார்த்தளவில் அந்தளவுக்கு இருப்பதாக (சோதனைச்சாவடிகள்) தெரியவில்லை. எந்தவகையிலும் இந்த அரசு மக்களை வஞ்சிக்காது. மக்களைப் பாதுகாத்து முன்னேற்றுவதற்கே நடவடிக்கை எடுக்கும். உங்கள் கோரிக்கை நியாயம் என்றால், நீங்கள் கூறிய வாறு நடக்கின்றதென்றால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும். – என்றார். (ஐ)

# நாவற்குழி சிவபூமி அருங்காட்சியகம் மரபுரிமை ஆக்கிரமிப்புக்கு எதிரான தமிழர்களின் தற்காப்புக் கவசமா?

கடந்த ஆண்டு யாழ். டான் தொலைக்காட்சி, அந்த ஆண்டுக்கான டான் விருதை ஆறு திருமுருகனுக்கு வழங்கிய போது அந்த விருது வழங்கும் வைபவத்தில் எனக்கருகில் இருந்த ஒரு மூத்த சிவில் அதிகாரி ஒரு கருத்தைக் கேட்டார்.

இந்த விருது ஆறு.திருமுருகனுக்கு வழங்கப்படுகிறது. அவரை ஒரு சமயச் சொற்பொழிவாளராகத் தான் தமிழ் சமூகம் அதிகம் அறிந்து வைத்திருக்கிறது. ஆனால் அதற்கும் அப்பால் அவர் முதியோர் பராமரிப்பு, அனாதை சிறார்கள் பராமரிப்பு போன்ற துறைகளில் தமிழில் முன் உதாரணம் மிக்க பல செயல்களைச் செய்திருக்கிறார்.

“இவற்றுக்கும் அப்பால் அவர் ஒரு காரியத்தையும் செய்திருக்கிறார். நாவற்குழியில் அவர் கட்டியிருக்கும் திருவாசக அரண்மனைதான் அது.

“அந்த அரண்மனையை வெறுமனே ஒரு மதம் சார் மண்டபமாக நாங்கள் பார்க்கத் தேவையில்லை அதற்கும் அப்பால் அதற்கு ஓர் ஆழமான அரசியல் பரிமாணம் இருக்கிறது. நாவற்குழியில் அரசாங்கம் ஒரு விகாரையைக் கட்டியெழுப்பி வருகிறது. அந்த இடத்தில் ஏற்கனவே சில ஆண்டுகளுக்கு முன்பு அடாத்தாக குடியமர்த்தப்பட்ட சிங்களக் குடியிருப்புக்கான வழிபாட்டு இடமாகத்தான் அந்த விகாரை கட்டப்பட்டு வருகிறது.

”இப்படிப் பார்த்தால் அந்த விகாரையானது ஒரு மரபுரிமை யுத்தத்தின் வெளிப்பாடு. யுத்தத்தை அரசாங்கம் வேறு வழிகளில் தொடர்கிறது என்பதற்கு அதுவும் ஓர் உதாரணம். அப்படிப்பட்ட முக்கியத்துவம் மிக்க இடத்தில் அந்த விகாரையில் இருந்து சில நூறு மீற்றர்கள் தொலைவில் இந்த திருவாசக அரண்மனை அமைந்திருக்கிறது.

“அந்த விகாரைக்கு சிங்கள யாத்திரிகர்கள் வருவதைப் போலவே – சிங்கள உல்லாசப் பயணிகள் வருவதைப் போலவே – இந்த திருவாசக அரண்மனைக்கும் தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் வந்து போகிறார்கள். புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்து வருபவர்களும் திருவாசக அரண்மனைக்கு வந்து போகிறார்கள்.

“இப்படிப் பார்த்தால் தமிழ் தரப்பில் சிங்கள – பௌத்த மரபுரிமை ஆக்கிரமிப்புக்கு எதிரான ஒரு தற்காப்பு கவசமாக இந்த திருவாசக அரண்மனையை எடுத்துக்கொள்ளலாமா?”– என்று அவர் என்னிடம் கேட்டார்.

அவர் அப்படிக் கேட்டது சரிதான் என்பதனை திருவாசக அரண்மனை திறக்கப்பட்ட முதலாவது ஆண்டு விழாவை கொண்டாடிய போது நிரூபிக்கப்பட்டது. திருவாசக அரண்மனை அதன் முதலாவது ஆண்டு விழாவைக் கொண்டாடிய அதே நாளில் பௌத்த விகாரையில் விசேட பிரித் ஓதும் வைபவமும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

ஒரே நாளில் சில நூறு மீற்றர் தொலைவில் உள்ள இவ்விரண்டு இடங்களிலும் ஒலிபெருக்கிகள் ஒரேநேரத்தில் ஒலித்தன. அது அங்கு ஒரு மோதல் இருப்பதைக் காட்டியது. திருவாசக அரண்மனைக்கு மதம் கடந்து ஓர் அரசியல் பரிமாணம் இருப்பதனை அது காட்டியது.

கடந்த கிழமை திருவாசக அரண்மனைக்கு எதிர்த் திசையில் சிவபூமி யாழ்ப்பாண அருங்காட்சியகத்தை ஆறு திருமுருகன் வைபவ ரீதியாக திறந்து வைத்துள்ளார்.

அந்த அருங்காட்சியகம் தொடர்பாக எனக்கு சில கேள்விகள் உண்டு. எனினும் அக்கேள்விகளுக்கும் அப்பால் நான் முன்பு சொன்ன அந்த மூத்த சிவில் அதிகாரி கூறியது போல அங்கே ஒரு மரபுரிமை தற்காப்பு யுத்தமும் இருக்கிறது.

முதலில் அந்த அருங்காட்சியகம் தொடர்பான எனது கேள்விகளைப் பார்க்கலாம்,

முதலாவது கேள்வி – ஒரு அரசத் தரப்பு அருங்காட்சியகத்தை உருவாக்கும் பொழுது அங்கே அரச வளம் முழுவதும் கொட்டப்பட்டு அது அந்த நாட்டின் மரபுரிமைச் சின்னங்களைப் பேணிப் பாதுகாக்கும் ஒரு தலமாகக் கட்டியெழுப்பப்படும்.

ஆனால் அரசு இல்லாத தரப்பு அப்படிப்பட்ட ஓர் இடத்தைக் கட்டும்போது அதற்கென்று வரையறைகள் உண்டு. இதுதொடர்பான உலகளாவிய அனுபவங்களை உள்வாங்கி மேற்படி அருங்காட்சியகம் திட்டமிடப்பட்டு வடிவமைக்கப்பட்டதா?

இரண்டாவது கேள்வி – ஓர் அருங்காட்சியகத்தைக் கட்டியெழுப்பும் போது அங்கே மரபைப் பேணுவது என்பதற்கும் அப்பால் அதை எப்படிப் பேணப் போகிறோம் என்பது தொடர்பாக உலகளாவிய அனுபவங்கள் கிரகித்துக் கொள்ளப்பட்டனவா?

அதாவது ஒரு சமூகத்தின் மரபுரிமைச் சொத்துக்களைப் பேணுவது என்பது நவீனமானதாக அமைய வேண்டும். அவ்வாறு மரபுரிமைச் சின்னங்களைப் பேணும் ஓர் அருங்காட்சியகம் நவீனமாக வடிவமைக்கப்பட வேண்டும். மேற்படி அருங்காட்சியகம் அவ்வாறு நவீனமாக வடிவமைக்கப்பட்டிருக்கிறதா?

ஒரு சமூகத்தின் மரபுரிமை என்று வரும்போது அந்த அருங்காட்சியகம் ஆனது தமிழ் தேசியத்தின் பல்வகைமையைப் பிரதிபலிப்பதாக அமைய வேண்டும். இன்னும் ஆழமாகச் சொன்னால் தமிழ் தேசியத்தின் ஜனநாயக இதயத்தின் செழிப்பை அது வெளிக்காட்ட வேண்டும். இந்த விடயம் மேற்படி அருங்காட்சியகத்தைக் கட்டியெழுப்பும் போது கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டதா?

மேற்படி கேள்விகளுக்கு விடை காணும்போது இனிவரும் காலங்களில் கட்டுப்படக்கூடிய அருங்காட்சியகங்கள் அவற்றுக்கான முழுமையோடு உருவாக்கப்பட வேண்டும்.

சிவபூமி அறக்கட்டளை உருவாக்கியிருக்கும் மேற்படி அறக்கட்டளையானது பெருமளவுக்கு ஆறு திருமுருகன் என்ற ஒரு தனி மனிதனின் உழைப்புதான். இதில் துறைசார் நிபுணர்களின் ஆலோசனைகள் பெறப்பட்டதாக அவர் கூறுகிறார்.

குறிப்பாக ஓவியங்களை வரையும் பொழுது யாழ் பல்கலைக்கழகத்தின் சித்திரமும் வடிவமைப்பும் துறையின் ஆலோசனைகள் பெறப்பட்டு இருப்பதோடு அந்த ஓவியங்களை படைத்தவர்களும் மேற்கூறிய பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் மாணவர்களுமே என்று அறிய முடிகிறது. எனவே இது விடயத்தில் மேற்படி அருங்காட்சியகம் ஒரு துறைசார் நிபுணத்துவம் பெற்று இருக்கிறது என்று எடுத்துக் கொள்ளலாம்.





இதைப்போலவே சிற்பங்களை வடிவமைக்கும் போதும் அதற்குரிய துறைசார் நிபுணர்களின் ஆலோசனைகள் பெறப்பட்டனவா?

ஒரு சமூகத்தின் மரபுரிமைச் சொத்துக்களை பேணுவது என்பது ஒரே நேரத்தில் ஒரு பண்பாட்டுச் செயற்பாடும் அரசியல் செயற்பாடும் ஆகும். குறிப்பாக இன்னொரு பெரிய சமூகத்தின் மரபுரிமை ஆக்கிரமிப்பை எதிர்கொள்ளும் ஒரு சிறிய சமூகத்தைப் பொறுத்தவரை – அதுவும் அரசற்ற தரப்பாக உள்ள ஒரு சமூகத்தைப் பொறுத்தவரை – மரபுரிமை பேணுகை எனப்படுவது அதற்கான வரலாற்று விழிப்போடும், பண்பாட்டு விழிப்போடும், அழகியல் விழிப்போடும், அரசியல் விழிபோடும் மிக நவீனமானதாகவும் திட்டமிடப்பட வேண்டும்.

அதாவது அது பல துறைசார் நிபுணர்களின் கூட்டு நடவடிக்கையாக அமைய வேண்டும். அந்தந்தத் துறைக்கு உரிய நிபுணர்களின் துறைசார் நிபுணத்துவம் பெறப்பட்டு ஒரு கூட்டு உழைப்பாக அது உருவாக்கப்பட வேண்டும்.

சில மாதங்களுக்கு முன்பு தொடங்கிய சுவர் ஓவிய அலையைப் போல அது துறைசார் நிபுணத்துவத்தைப் புறந்தள்ளிவிட்டு முழுக்க முழுக்க ஜனரஞ்சக தளத்தில் முன்னெடுக்கப்படும் ஜனரஞ்சக நடவடிக்கையாக மட்டும் குறுக்கக் கூடாது.

சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் ஆகிய ஆறு திருமுருகனின் தனிநபர் உழைப்பை இக்கட்டுரை போற்றுகிறது. அதேசமயம் நாவற்குழியில் நிகழ்ந்துகொண்டிருக்கும் ஒரு மரபுரிமை மோதலை அரசற்ற தரப்பு எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும்?

தனிய ஓர் ஆறு திருமுருகனின் தலையில் மட்டும் சுமத்திவிட்டு சமூகத்தின் ஏனைய பொறுப்பு மிக்க புத்திஜீவிகளும் செயற்பாட்டாளர்களும் அரசியல்வாதிகளும் அவர் திறந்து வைக்கும் அருங்காட்சியகத்தில் விருந்தினர்களாகக் கலந்துகொண்டுவிட்டு அதைப் பாராட்டினால் மட்டும் போதுமா?

அதற்கும் அப்பால் இதுபோன்ற மரபுரிமை மோதல்கள் நடக்கும் எல்லா இடங்களிலும் தமிழ் மக்களின் மரபுரிமைச் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான தற்காப்பு யுத்தத்தை தமிழ் தேசியத்தின் ஜனநாயக செழிப்பை வெளிப்படுத்தும் விதத்தில் உலகின் ஏனைய அரசற்ற தரப்புகளின் அனுபவங்களையும் உள்வாங்கிய ஒரு நவீன செயற்பாடாக முன்னெடுக்க வேண்டும்.

ராஜபக்ஷக்களின் இரண்டாவது ஆட்சியில் யுத்தம் மேலும் புதிய வழிகளில் தொடரக்கூடும் என்பதற்கான அறிகுறிகளே தென்படுகின்றன. நல்லாட்சி அரசாங்கம் என்று சொல்லிக்கொண்டு வந்த ரணில் விக்கிரமசிங்க அரசாங்கமானது ஆயிரம் பௌத்த விகாரைகளைக் கட்டித் தருவேன் என்று சிங்கள மக்களுக்கு வாக்குறுதி வழங்கியது.

ராஜபக்ஷவுக்கு எதிராக தேர்தலில் நின்ற சஜித் பிரேமதாஸவே அவருடைய அமைச்சின் நிதியில் நாவற்குழி விகாரையைக் கட்டினார் என்று குற்றஞ் சாட்டப்படுகின்றது. எனவே சிங்கள, பௌத்த மரபுரிமை ஆக்கிரமிப்பைப் பொறுத்தவரை ராஜபக்ஷக்களும் நல்லாட்சிக்காரர்களும் ஒன்றுதான்.

அடுத்த ஜெனிவா கூட்டத் தொடரும் நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரைக் களமும் ஏறக்குறைய சற்று முன்பின்னாகத்தான் வரப்போகின்றன. ஜெனிவா கூட்டத் தொடரில் மேற்கு நாடுகளுக்கு எதிரான ஒரு மோதலை முன்னெடுப்பதன் மூலம் உள்நாட்டில் இன ரீதியாக வாக்குகளை அறுவடை செய்வதற்கு ராஜபக்ஷக்கள் முயற்சிக்கக் கூடும்.

எனவே மரபுரிமை ஆக்கிரமிப்பு எனப்படுவது இனிவரும் காலங்களில் மேலும் விஸ்தரிக்கப்பட்ட வடிவங்களில் முன்னரை விடத் தீவிரமான விதங்களில் முன்னெடுக்கப்படக் கூடிய வாய்ப்புகளே அதிகம் தெரிகின்றன. அப்படிப்பட்ட ஓர் அரசியல் சூழலில் நாவற்குழியில் திறக்கப்பட்டிருக்கும் அருங்காட்சியகத்துக்கு ஒரு வரலாற்றுச் சிறப்பு உண்டு. ஓர் அரசியல் முக்கியத்துவம் உண்டு. ஒரு பண்பாட்டு முக்கியத்துவம் உண்டு.

அரசு இல்லாத தரப்பாகிய தமிழ் தரப்பு தனது மரபுரிமைச் சொத்துக்களையும் செழிப்பையும் தமிழ் தேசிய நோக்கு நிலையிலிருந்து எப்படிப் பேணுவது என்பதனை துறைசார் நிபுணத்துவத்தோடும் அழகியல் உணர்வோடும் நவீனமானதாகவும் திட்டமிட வேண்டும்.

நன்றி - ஆதவன் இணையம்
லிதர்சன்

# 5 பேர் கொண்ட குடும்பத்தை நாடு கடத்துகின்றது கனடா



மொன்றியல், பெப். 07

கனடாவில் இருந்து ஐந்து பேர் கொண்ட குடும்பம் ஒன்று இலங்கைக்கு நாடு கடத்தப்படும் அபாய நிலையில் உள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையைச் சேர்ந்த நிஷான் பெர்னாண்டோ அவரது மனைவி சுலக்சனா ஹேவகே மற்றும் அவர்களது மூன்று பிள்ளைகளே நாடு கடத்தப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளவர்களாவர்.

கடந்த 2012 ஆம் ஆண்டு இவர்கள் இலங்கையிலிருந்து கனடாவுக்கு குடிபெயர்ந்திருந்தனர்.இவர்களின் இரண்டு பிள்ளைகள் கனடாவில் பிறந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தமது மாமாவுடன் ஏற்பட்ட பிரச்சினை, அதனால் தம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் என்பவற்றால் தாம் அச்சமடைந்து கனடாவுக்கு குடிபெயர்ந்ததாக அவர்கள் தெரிவித்திருந்தனர்.

அவர்களது வழக்கு கனடா பெடரல் நீதிமன்றில் நடந்து வந்த நிலையில் அந்தத் தம்பதி மீது தாக்குதல் நடத் தப்பட்டதற்கான ஆதாரம் எதுவும் இல்லையெனவும் இலங்கையில் எவ்வித ஆபத்தும் இல்லையெனவும் தெரிவித்து இவர்களின் விண்ணப்பத்தைக் கடந்த 2018 ஆம் ஆண்டு நீதிமன்றம் நிராகரித்தது.

எனினும் இவர்களுக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை என நீதிமன்றம் தெரிவித்துள்ள நிலையில், அவர்களை எதிர்வரும் மார்ச் மாதம் 03 ஆம் திகதி நாடு கடத்துவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த நிலையில் நிஷான் பெர்னாண்டோவின் 09 வயது மகனான மனேற் பெர்னாண்டோ தனக்கு இலங்கைக்கு செல்ல விருப்பம் இல்லை எனக் கனடா குடிவரவு அமைச்சருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அதில், கனடா மிகவும் பாதுகாப்பான இடம், இங்கு நிறைய பள்ளிகள் நல்ல நண்பர்கள் இருக்கின்றனர். இதை விட்டு நான் இலங்கை சென்றால் அங்கிருக்கும் குழந்தைகள் நான் பேசும் மொழியை பார்த்துச் சிரிப்பார்கள். ஏனெனில் நான் ஆங்கிலம் தான் பேசுவேன். அதுமட்டுமின்றி என்னுடைய பெற்றோருக்கும் ஏதேனும் ஆகிவிடுமோ என்ற பயம் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளான். இந்தப் பின்னணியில் அந்தக் குடும் பம் நாடு கடத்தப்படுமா என்பது மார்ச் 03 ஆம் திகதியே தெரியவரும்.

# மன்னாரில் இடம்பெற்ற நெல் அறுவடை விழா





மன்னார், பெப். 07

மன்னார், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பரப்பாங்கண்டல் கிராமத்தில் நெல் அறுவடை விழா இடம்பெற்றது.

மன்னார் விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்ற இந்த நெல் அறுவடை விழாவில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் சிவகுமார் கலந்துகொண்டார்.

இதன்போது 'சுகந்தல்' எனும் நெல் அறுவடை செய்யப்பட்டது. இந்த நிகழ்வில் விவசாயத் திணைக்கள அதிகாரிகள், பணியாளர்கள், விவசாயிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.





# ‘ஐஸ்’ போதை வர்த்தகர் காத்தான்குடியில் கைது!



காத்தான்குடி,பெப்.07

மட்டக்களப்பு காத்தன்குடி பொலிஸ் பிரிவில் பொலிஸ் பெருங்குற்றப் புலனாய்வுப் பிரிவு நடத்திய திடீர் சுற்றி வளைப்பில் பிரபல ஐஸ் போதைப் பொருள் வர்த்தகர் ஒருவர் மற்றும் கஞ்சாவை வைத்திருந்தவர்கள் என்று கூறப்படுபவருமான இருவருமாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனக் காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி துமிந்த நயனசிறி தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நுவன் மெண்டிஸின் பணிப்புரையில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.ஜெயரட்ணவின் வழிகாட்டலில் பொலிஸ் நிலையில் பொறுப்பதிகாரி துமிந்த நயணசிறியின் தலைமையிலான பொலிஸ் குழுவினர் இவர்களை நேற்று அதிகாலை கைது செய்தனர்.

இவர்களிடமிருந்து 410 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் 1440 கிராம் கஞ்சா என்பன கைப்பற்றப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. சந்தேக நபர்கள் மட்டக்களப்பு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளனர். காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# மாங்குளம் பாலைப்பாணியில் குடும்பஸ்தர் சுட்டுக் கொலை!

முல்லைத்தீவு – மாங்குளம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாங்குளம் பாலைப்பாணி பிரதேசத்தில் ஒருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார். அந்தப் பகுதியில் உள்ள குளம் ஒன்றுக்கு அருகிலிருந்து நேற்று அதிகாலை மேற்படி சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

தனிப்பட்ட குரோதம் காரணமாக இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி உதயநகர் பகுதியை சேர்ந்த 46 வயதுடைய 3 பிள்ளைகளின் தந்தையான ஜெயா என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சம்பவம் இடம்பெற்ற பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளமையுடன், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# விபசார குற்றச்சாட்டில் கைதான தாய், மகளுக்கு விளக்கமறியல்!

தனது பெண் பிள்ளைகளை அவர்களின் விருப்பத்துக்கு மாறாக விபசாரத்தில் ஈடுபடுத்தினார் என்ற சந்தேகத்தின் பேரில் நாவலப்பிட்டி பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட 52 வயது தாய் மற்றும் அவரது மகள்மாரில் ஒருவரினதும் விளக்கமறியல் எதிர்வரும் 17 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

மற்றைய சந்தேக நபரான பெண்ணை 50,000 ரூபா சரீரப்பிணையில் செல்ல நாவலப்பிட்டி நீதிமன்ற நீதவான் சாந்தினி மீகொட அனுமதித்தார்.

நாவலப்பிட்டி தொலஸ்பாகை வீதியில் அமைந்துள்ள வீடு ஒன்றில் விபசாரம் இடம்பெற்று வருவதாக நாவலப்பிட்டி பொலிஸ் நிலைய மகளிர் பிரிவைச் சேர்ந்த பெண் பொலிஸ் அதிகாரியான சாமலிக்கு கிடைக்கப்பெற்று வந்த இரகசியத்

தகவல்களின் அடிப்படையில் நாவலப்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கலுகம் பிட்டியவின் ஆலோசனைக்கமைய பொலிஸ் அதிகாரிகள் இருவர் வாடிக்கையாளர்கள் போல் வேடமிட்டு சந்தேக நபரான பெண்ணைத் தொடர்புகொண்டு உரையாடியுள்ளனர்.

இதன்போது ஒருவருக்கு ஐயாயிரம் ரூபா பேரம் பேசி இறுதியில் ஆயிரம் ரூபாவுக்கு இணங்கியுள்ளமெளயுடன் தனது வீட்டில் உள்ள இரு அறைகளையும் தயார்படுத்தி கொடுத்துள்ளார். இச்சந்தர்ப்பத்திலேயே சந்தேக நபரான தாயையும் அவரது இரு மகள்மாரையும் பொலிஸார் கைது செய்து நீதிமன்ற உத்தரவிற்கமைய திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைத்திருந்ததுடன் சந்தேக நபரின் பாதுகாப்பிலிருந்த 12. வயது சிறுமி 4 வயது ஆண் குழந்தை ஆகியோரை நீதி மன்ற உத்தரவுக்கமைய சிறுவர் பாதுகாப்பகத்தில் ஒப்படைத்திருந்தனர்.

இந்த நிலையில் குறித்த வழக்கு திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போது சந்தேக நபர்களின் ஒருவரான 24 வயது பெண்ணின் குழந்தை தாயைப் பிரிய முடியாது தொடர்ச்சியாக அழுது கொண்டிருந்தமையால் அப்பெண்ணை நீதிவான் பிணையில் செல்ல அனுமதித்ததுடன் சிறுமியையும் அவர் பாதுகாப்பில் வைத்திருக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# ரஞ்சன் ராமநாயக்கவின் குரல் பதிவுகளைக் கேட்டால் தர மறுக்கின்றார்கள் என்று ஹிருணிக்கா குற்றச்சாட்டு

கொழும்பு, செப்.07

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராம்நாயக்கவின் குரல் பதிவுகள் ஹன்சார்ட் பிரிவுக்கு வழங்கப்பட்டன எனக் கூறப்பட்டாலும் அவற்றை எமக்கு கொடுக்க மறுக்கின்றனர். ஆளும் தரப்பின் குரல் பதிவுகள் இருப்பதால் இப்போது குரல் பதிவுகளை மூடி மறைக்கப் பார்க்கின்றனர் என நாடாளுமன்றத்தில் ஹிருணிக்கா பிரேமசந்திர எம்.பி. கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய அவர் இதனைக் கூறினார்.

அவர் இதில் மேலும் கூறுகையில் –

ஹன்சார்ட் பிரிவுக்கு ரஞ்சன் ராமநாயக்க எம்.பியின் குரல் பதிவுகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் நாடாளுமன்ற நூலகத்துக்குச் சென்று இதனை கேட்டால் எமக்குத் தர மறுக்கின்றார்கள்.

ஏன் எனக் கேட்டால் கட்சி தலைவர்கள் கூட்டத்தில் அங்கீகாரம் கிடைத்தால் மட்டுமே எமக்குத் தர முடியும் என கூறுகின்றனர்.

கடந்த காலங்களில் மிகவும் மோசமான அவமதிப்பு கருத்துக்களை எம் மீது கூறினர். ரஞ்சன் ராமநாயக எம்.பி. சபையில் பேசியதை அடுத்து ஆளும் தரப்பின் உறுப்பினர்களின் குரல் பதிவுகளும் உள்ளன எனக் கூறியமையை அடுத்து இவ்வாறு மூடி மறைப்பது மோசமான செயற் பாடாகும்.

ஆகவே முதலில் உண்மையான குரல் பதிவுகளை வெளியிட வேண்டும். அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் இந்த குரல் பதிவுகளை பெற்றுக்கொள்ளும் உரிமை எனக்கு உண்டு. இன்றைய தினமே எனக்கு இந்த குரல் பதிவுகளை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றார்.

இதற்குப் பதில் தெரிவித்த சபாநாயகர் இன்றைய தினம் குரல் பதிவுகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க முடியாது. கூடிய விரைவில் அதற்கான நடவடிக்கை எடுக்கிறேன். கட்சி தலைவர்களுடன் பேசி இது குறித்து நடவடிக்கை எடுக்கிறேன். – என்றார்.

# ஜி.சீ.ஈ. உயர்தரம் சித்தியடைந்த மாணவியர்களின் மீது பகிடிவதை

## தொலைபேசி மூலம் தொல்லை எனத் தகவல்

யாழ் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி பீட 2017 ஆம் ஆண்டு தொழில்நுட்பப் பிரிவு மாணவர்கள் புதிதாக சேர்ந்த மாணவிகள் மீது கொடூரமான முறையில் ராக்கிங் செய்ய முற்பட்டுள்ளனர் என அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியுள்ளன என்று இணையத் தளங்கள் பகிரங்கமாகச் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தப் பல்கலைக்கழக மாணவர்கள் ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்திற்கு சேரவுள்ள மாணவிகளின் தொலைபேசி இலக்கங்களை வாங்கி மிகக் கேவலமான முறையில் உரையாடி வருகின்றனர்.

இவர்களின் தொல்லை தாங்காது மாணவி ஒருவர் பயத்தின் காரணமாக தற்கொலைக்கு முயன்றுள்ளார். இதனால் அதிர்ச்சியடைந்த மாணவியின் தந்தை மாணவியிடம் விசாரித்த போதே இந்த அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த மாணவி உட்பட பல மாணவிகளிடம் 2017 ஆம் ஆண்டு மாணவர்கள் இவ்வாறான கேவலங்களைப் புரிந்துள்ளார்கள். மாணவியின் தொலைபேசி இலக்கத்திற்கு ஏராளமான தொலைபேசி இலக்கங்களில் இருந்து அழைப்பு வந்துள்ளது. தாங்கள் சொல்வதை எல்லாம் செய்யச்



சொல்லியும் வாட்ஸப் குறூப் உருவாக்கி அவர்களின் புகைப்படங்களை அதற்குள் போடச் சொல்லி தொலைப்படுத்துகின்றமையுடன் தனித் தனி அழைப்புக்கள் எடுத்து வாட்ஸப் ஒன்லைனில் நிர்வாணமாக நிற்கச் சொல்லுகின்றனர் எனவும் அதிர்ச்சித் தகவல்களை அந்த மாணவி தெரிவித்துள்ளார். – என்று செய்திகள் வெளியாகின்றன.

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை, கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும். நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்
அருள்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட்
இல.10, மாநகர சபை புதிய கட்டத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536
நெல்லியடியில் – இல.01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் – இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.02.2020 இல் வெளியிடப்பெற்றது.